ISSN 1800-3699
9771800369000

# இருக்கிறோம்

மாதம் இருமுறை

காத்திருப்பு 5 - இருக்கை 8 | ஒரு பொல்லாப்புமில்லை | 15-30 ஜூன் 2010


## கசிப்பில் மூழ்கும் அட்டாம்பிட்டிய கிராமம்!




50/-

## மீள் குடியேற்றமும் மீளமுடியாத சுமைகளும்!

விளைத்திறன் மிக்க சேவை நிர்வாகம் மற்றும் பிரஜைகளின் ஆலோசனை பெறல் என்பவற்றினூடாக பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்துவதற்காக பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை என்பவற்றுடன் இணைந்து செயற்படும் ஒரு உயரிய அமைப்பே "இலங்கை ஆசிய நிலையம்" உள்ளூராட்சி சபைகளின் வெளிப்படையான தன்மையை மேம்படுத்தி, சிறந்த பொருளாதார வளர்ச்சியை பொதுமக்கள் அடைவதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதே ஆசிய நிலையத்தின் முக்கிய நோக்கமாகும்.




நியாயமான, சுதந்திரமான நீடித்து நிலைத்திருக்கும் உலகம். இதற்குத்தான் அபிவிருத்திக் கூட்டுறவுக்கான மனிதநேய நிறுவனம் **HIVOS** பங்களிக்க விரும்புகிறது. சகல பிரஜைகளும் அதாவது ஆண்களும், பெண்களும் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களையும், வளங்களையும் சம அளவில் அடையக்கூடியதான ஒரு உலகிற்காக, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலுள்ள உள்ளூர் அமைப்புகளுடன் இணைந்து **HIVOS** பாடுபடுகிறது.

மனிதநேயப் பெறுமானங்களினால் வழிநடத்தப்படும் **HIVOS**, நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த அரச சார்பற்ற அமைப்பாகும். இவ்வமைப்பு ஆசியா, ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்காவிலுள்ள வறிய, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உழைக்கிறது. இம் மக்களது சூழ்நிலைகளின் நீண்டகால அபிவிருத்திக்காகவும், குறிப்பாக பெண்களை வலுப்படுத்தவும் இது பாடுபடுகிறது.

# இருப்பு




Free Issue
Irukkiram

"மீள்குடியேற்றம்"


அவருக்கு பாஸ் கிடைத்து விட்டது! 08

ஒற்றுமைப்பட வேண்டிய நேரத்தில் ஒற்றுமைப்பட்டிருந்தால்...! 14

சிங்கம் 20

உலகக் கிண்ணம் யாருக்கு? 28



ஒரு பொல்லாப்புமில்லை

# இருக்கிறம்

மாதம் இருமுறை

இதழ் 56

காத்திருப்பு 05 - இருக்கை 08



#3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07.
தொலைபேசி: +94 11 3150836 +94 11 2506272
தொலைநகல் +94 11 2585190
மின்னஞ்சல் irukiram@gmail.com



நிர்வாக ஆசிரியர் : சாந்தி சச்சிதானந்தம்

இணை ஆசிரியர் : அருளானந்தம் சஞ்சீத்

கார்ட்டூன் : சஞ்சீத்

வடிவமைப்பு : சோ. விபுலன்
செ. ஜெயதேவன்
சி. திவாகரன்

கணனி தட்டச்சு : எஸ். சதீஸ்



கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளிவரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல.




# மீள் குடியேற்றமும் மீளமுடியாத சுமைகளும்!

தர்ஷாயணீ லோகநாதன்

**யுத்தம்,** பேரினவாதம் என்று சொல்லப்படும் சமாச்சாரங்கள் எல்லாம் முடிவடைந்து இன்றைக்கு ஓராண்டு நிறைவுபெற்ற பின்னரும்கூட வன்னி மக்கள் தத்தமது சொந்த இருப்பிடத்திற்குச் சென்று மீளக்குடியமர்வதில் பல்வேறு தடைகளையும், சிக்கல்களையும் எதிர்நோக்கி வருகின்றார்கள். இது தொடர்பான உண்மைத் தகவல்களைச் சேகரிப்பதற்காக அண்மையில் கிளிநொச்சி செல்லும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அங்குள்ள மக்களைச் சந்தித்து அவர்களுடைய பிரச்சனைகளைக் கேட்டறிந்தோம். கடந்த வருடம் மார்கழி முதலாந் திகதியில் இருந்து மீள்குடியேற்றத் திட்டம் அமுலாகிக் கொண்டு வருகின்றது. மீள் குடியேற்றத்துக்கென வவுனியா செட்டிக்குளம் பகுதியில் நலன்புரி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மக்கள் அழைத்து வரப்பட்டிருக்கிறார்கள். கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரைக்கும் மொத்தமாக 23,122 குடும்பங்களை குடியமர்த்துவதற் காக ஏன் இவ்வளவு தாமதம் என்று தெரியவில்லை.

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்துக்குக் கொண்டு வரப்பட்ட இம்மக்கள் காற்றுக்கூட உட்புக முடியாத மூன்று மிகக் குறுகிய கட்டிடங்களுக்குள் அடைக்கப்படுகிறார்கள். அவர்களுடைய சுகாதாரத்தைப் பற்றி சொல்லவே தேவையில்லை. அங்கு கிட்டத்தட்ட 380 குடும்பங்கள் ஒரே கிணற்றினைப் பயன்படுத்துவதுடன் மிக மோசமான நிலையில் காற்றுக்கு ஆடி விழும் தகரங்களைக் கொண்ட நான்கே நான்கு கழிவறையில் புழங்குவதைப் பார்க்க மிகவும் கஷ்டமாகவிருந்தது. பகலில் இளையான்களும் இரவில் மலேரியா நுளம்புகளும் இவர்களைப் பதம்பார்க்கின்றன. துர்நாற்றங்களுக்கும் தொற்றுநோய்களுக்கும் மத்தியில் குழந்தைகளும் முதியவர்களும் மிகமோசமாக வாழ்ந்து வருகின்றனர்.

சிவில் இராணுவத்தினரிடம் அது பற்றிக் கேட்டால் "அவர்களுக்கென்ன? மணியடித்தால் மூன்று வேளையும் சாப்பாடு வரும் ஏகபோக வாழ்க்கை வாழ்கிறார்கள்" என்று போய் வரும் எல்லா ஊடகவியலாளர்களுக்கும் வாய் நிறையச் சிரித்துக்கொண்டே கூறுகிறார்கள். அவர்கள் பேச்சில் எவ்வளவு உண்மையிருக்கின்றது என்று அந்த இடத்தில் ஒரு அரை மணிநேரம் செலவிட்டிருந்தால் புரிந்திருக்கும்.

இங்குள்ள மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுவருவதுடன் உலக உணவுத்திட்ட மையம் மூன்று வேளை உணவு வழங்குகின்றது. ஆனால் இந்த நிவாரணப் பொருட்களில் சில அடிக்கடி காணாமல் போவதாகவும் அவை சிவில் இராணுவத்தினருக்கு வேண்டிய உணவுக்கடைகளிலும், கிராம சேவகர்களுக்கு வேண்டிய உறவினர்கள் வீட்டிலும் மலிவு விலையில் கிடைக்கின்றனவாம். மீள் குடியேற்ற மக்களுக்கென்று கொடுக்கப்பட்ட முதற்கட்ட ஐயாயிரம் ரூபாய் கையிருப்பு தீர்ந்த நிலையில் தமது அன்றாட மருத்துவத் தேவைக்குக்கூட பணமில்லாமல் மோட்டுமுகட்டைப் பார்த்துக்கொண்டு மக்கள் இருக்கின்ற நிலை மிகவும் வேதனைமிகுந்ததாக இருக்கின்றது.

மக்களின் மருத்துவத்தேவை மிக அத்தியாவசியமாக இருந்த போதிலும் முகாமுக்கு மிகத் தொலைவிலேயே மருத்துவ முகாம்கள் நடாத்தப்படுகின்றன. போக்குவரத்து வசதிகள் எதுவுமே செய்து கொடுக்கப்படாத நிலையில் நோயாளிகளும், யுத்தத்தால் அங்கவீனர்களான மக்களும் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றனர். பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில்கூட எந்தவித முன்னேற்றமும் இல்லை. அருகில்

## பதிப்பகத்தார்




# தமிழன் என்ன இளிச்சவாயனா?




**1950**களில் தமிழ்நாட்டில் எழுந்த திராவிடர் இயக்கத்தினை இந்திய அரசு சாதுரியமாகப் புறந் தள்ளி விட்டது என்றுதான் கூறவேண்டும். இந்திய மாநிலங்களில் மக்களின் குறைகளைக் கேட்டு நிவர்த்தி நடவடிக்கைகளை நடுநிலைமையுடன் எடுக்கும் ஆணைக்குழு ஒன்றினை இந்திய அரசு நியமித்தது இதற்கு ஒரு காரணமாகும். ஆனால் அதனைவிட, தமிழ்நாட்டின் முதலீடுகளுக்கான சந்தையை அகில இந்திய ரீதியாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பினை இணைந்த இந்தியா விலேயே பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது தான் அதிலும்விட முக்கிய காரணமாக இருந்தது. 1960களுக்குப் பிறகு, அதுவும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பின்பு திராவிடர் இயக்கம் அடங்கிவிட்டது. டெல்லியின் ஆதிக்க மனோ பாவம் தமிழ் மக்களுக்கு மறந்து போய்விட்டது.


இந்த நிலைமை ஈழப்போராட்டம் சூடு பிடிக் கும் வரைக்கும்தான். அப்போது, எழுந்தது தமிழ் அலையொன்று. 2008இலும் 2009இலும் தமிழ்நாடு கொந்தளித்தது. ஆனால் டெல்லியோ தமிழ்த் தேசியப் போராட்டத்தை நசுக்கும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை அழிக்கும் தனது இலக்குகளிலிருந் தும் வியூகங்களிலிருந்தும் இம்மியளவும் அசைவ தாக இல்லை. ஆனாலும் எந்தத் தேசிய வாதத்தை அழிக்க இந்திய அரசு கிளம்பியதோ, அதனையே இந்த அநீதியான சாணக்கியம் உசுப்பிவிட்டது. தமிழகத்தின் பல மாவட்டங்களில் வீட்டுக்கு வீடு பிரபாகரனின் படங்கள் அவற்றின் முன்னறைகளை அணி செய்ய ஆரம்பித்தன. குடும்பங்களில் நிகழும் சாமத்தியச் சடங்குகளோ அல்லது பிறந்தநாள் விழாக்களோ எதுவானாலும் அவற்றுக்கான அழைப்பிதழ்களின் மேலே பிள்ளையார் சுழி போடுவதுபோல 'பிரபாகரன் துணை' என்கின்ற வாக்கியங்கள் தென்பட ஆரம்பித்தன. 'நாம் தமிழர்' என்கின்ற இயக்கமும் துளிர்விட்டது. இதற்கு தெலுங்கானா இயக்கமும் நக்ஸலைட்டுக்களின் வளர்ச்சியும் உத்வேகம் கொடுத்தன.

இந்தியாவின் இந்தப் போக்குகளின் விளை வைத்தான் சமீபத்தில் கொழும்பில் நிகழ்ந்த ஐஃபா

திரைப்பட விழா இப்பொழுது உணர்த்தி நிற்கிறது. தமிழகத்தில் மறைமுகமாக இருந்த உணர்வுகளை வெளிப்படையாகக் காட்டக்கூடிய சந்தர்ப்பமாக ஐஃபா திரைப்பட விழா அமைந்திருக்கின்றது. அரசியல் தளங்களால் தாம் நிராகரிக்கப்பட்டாலும் அதனுடன் இணையான செல்வாக்குப் பொருந்திய திரைப்படத்துறையில் இன்னும் தொடர்ந்து பலவித போராட்டங்களை முன்னெடுக்க முடியும் என்பதை தமிழக மக்கள் செய்து காட்டியிருக்கின்றனர். எந்தச் சந்தை திராவிடர் போராட்டத்தை அடக்குவதற்குப் பயன்பட்டதோ, அதே சந்தையை உபயோகித்து இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. அமிதாப்பச்சன், ஐஸ்வர்யாராய், ஷாருக்கான் போன்றவர்கள் வருவார்கள் என்று பெரிதாக விளம்பரம் செய்யப்பட்டாலும் அவர்களைப் போன்ற பெரிய நட்சத்திரங்கள் ஒருவரும் வரவில்லை. வந்த நட்சத்திரங்களான ஹ்ருத்திக் ரோஷன், கத்ரீனா கைஃப், விவேக் ஒபராய் போன்றவர்களின் படங்கள் தமிழகத்தில் திரையிடப்படக்கூடாதென்று 'நாம் தமிழர்' இயக்கம் வலியுறுத்தி வருகின்றது. அப்படியே ஹ்ருத்திக் ரோஷன் நடித்த கைட்ஸ் திரைப்படமும், கத்ரீனா நடித்த ராஜி சிட்டி திரைப் படமும் 'நாம் தமிழர்' இயக்கத்தின் கோரிக்கையின் அடிப்படையில் திரையரங்குகளிலிருந்து தூக்கப் பட்டுவிட்டன. தமிழன் என்றால் இளிச்சவாயன் என்று நினைப்பா என்று கொதித்தெழுந்திருக் கின்றனர் தமிழக மக்கள்.

அமிதாப்பச்சன் எதை நினைத்துப் பயந்து தனது கொழும்பு விஜயத்தை ரத்துச் செய்தார் என்பதை நாங்கள் உணர்ந்து கொள்ளலாம். இலங்கை அரசாங் கத்தின் மெத்தனத்தை அவதானித்து இனி இந்திய அரசு தமிழர் பிரச்சினைக்கான தீர்வினை முன் வைக்க நடவடிக்கை எடுக்கப் போகிறது என்கின்ற செய்தியும் இதனுடன் கூட வந்தது தற்செயலாக நடந்ததல்ல.

இனி பொறுத்திருந்துதான் பார்ப்போமே.







ஜூன் 20
உலக அகதிகள் தினம்

நேரடி ரிப்போர்ட்

# மீள் குடியேற்றமும் மீளமுடியாத சுமைகளும்!

தர்ஷாயணீ லோகநாதன்

**யுத்தம்**. பேரினவாதம் என்று சொல்லப்படும் சமாச்சாரங்கள் எல்லாம் முடிவடைந்து இன்றைக்கு ஓராண்டு நிறைவுபெற்ற பின்னரும்கூட வன்னி மக்கள் தத்தமது சொந்த இருப்பிடத்திற்குச் சென்று மீளக்குடியமர்வதில் பல்வேறு தடைகளையும், சிக்கல்களையும் எதிர்நோக்கி வருகின்றார்கள். இது தொடர்பான உண்மைத் தகவல்களைச் சேகரிப்பதற்காக அண்மையில் கிளிநொச்சி செல்லும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அங்குள்ள மக்களைச் சந்தித்து அவர்களுடைய பிரச்சனைகளைக் கேட்டறிந்தோம். கடந்த வருடம் மார்கழி முதலாந் திகதியில் இருந்து மீள்குடியேற்றத் திட்டம் அமுலாகிக் கொண்டு வருகின்றது. மீள் குடியேற்றத்துக்கென வவுனியா செட்டிக்குளம் பகுதியில் நலன்புரி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மக்கள் அழைத்து வரப்பட்டிருக்கிறார்கள். கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரைக்கும் மொத்தமாக 23,122 குடும்பங்களை குடியமர்த்துவதற் காக ஏன் இவ்வளவு தாமதம் என்று தெரியவில்லை.

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்துக்குக் கொண்டு வரப்பட்ட இம்மக்கள் காற்றுக்கூட உட்புக முடியாத மூன்று மிகக் குறுகிய கட்டிடங்களுக்குள் அடைக்கப்படுகிறார்கள். அவர்களுடைய சுகாதாரத்தைப் பற்றி சொல்லவே தேவையில்லை. அங்கு கிட்டத்தட்ட 380 குடும்பங்கள் ஒரே கிணற்றினைப் பயன்படுத்துவதுடன் மிக மோசமான நிலையில் காற்றுக்கு ஆடி விழும் தகரங்களைக் கொண்ட நான்கே நான்கு கழிவறையில் புழங்குவதைப் பார்க்க மிகவும் கஷ்டமாகவிருந்தது. பகலில் இளையான்களும் இரவில் மலேரியா நுளம்புகளும் இவர்களைப் பதம்பார்க்கின்றன. துர்நாற்றங்களுக்கும் தொற்றுநோய்களுக்கும் மத்தியில் குழந்தைகளும் முதியவர்களும் மிகமோசமாக வாழ்ந்து வருகின்றனர்.

சிவில் இராணுவத்தினரிடம் அது பற்றிக் கேட்டால் “அவர்களுக்கென்ன? மணியடித்தால் மூன்று வேளையும் சாப்பாடு வரும் ஏகபோக வாழ்க்கை வாழ்கிறார்கள்” என்று போய் வரும் எல்லா ஊடகவியலாளர்களுக்கும் வாய் நிறையச் சிரித்துக்கொண்டே கூறுகிறார்கள். அவர்கள் பேச்சில் எவ்வளவு உண்மையிருக்கின்றது என்று அந்த இடத்தில் ஒரு அரை மணிநேரம் செலவிட்டிருந்தால் புரிந்திருக்கும்.

இங்குள்ள மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுவருவதுடன் உலக உணவுத்திட்ட மையம் மூன்று வேளை உணவு வழங்குகின்றது. ஆனால் இந்த நிவாரணப் பொருட்களில் சில அடிக்கடி காணாமல் போவதாகவும் அவை சிவில் இராணுவத்தினருக்கு வேண்டிய உணவுக்கடைகளிலும், கிராம சேவகர்களுக்கு வேண்டிய உறவினர்கள் வீட்டிலும் மலிவு விலையில் கிடைக்கின்றனவாம். மீள் குடியேற்ற மக்களுக்கென்று கொடுக்கப்பட்ட முதற்கட்ட ஐயாயிரம் ரூபாய் கையிருப்பு தீர்ந்த நிலையில் தமது அன்றாட மருத்துவத் தேவைக்குக்கூட பணமில்லாமல் மோட்டுமுகட்டைப் பார்த்துக்கொண்டு மக்கள் இருக்கின்ற நிலை மிகவும் வேதனைமிகுந்ததாக இருக்கின்றது.

மக்களின் மருத்துவத்தேவை மிக அத்தியாவசியமாக இருந்த போதிலும் முகாமுக்கு மிகத் தொலைவிலேயே மருத்துவ முகாம்கள் நடாத்தப்படுகின்றன. போக்குவரத்து வசதிகள் எதுவுமே செய்து கொடுக்கப்படாத நிலையில் நோயாளிகளும், யுத்தத்தால் அங்கவீனர்களான மக்களும் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றனர். பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில்கூட எந்தவித முன்னேற்றமும் இல்லை. அருகில்

நான்கு ஆசிரியர்களுடன், போதிய கட்டிடமோ, கூரை வசதியோ இல்லாத பாடசாலையொன்று பெயருக்கு இயங்கி வருகின்றது.

மீள் குடியேற்ற மக்களுக்கு முதற்கட்டமாக ஐயாயிரம் ரூபாயும், இரண்டாம் கட்டமாக தற்காலிக குடியிருப்புக் கொட்டிலும், மூன்றாம் கட்டமாக இருபத்தையாயிரம் ரூபாயுடன் எட்டு பைக்கேற் சீமெந்தும், இரண்டு மூன்று மாதம் அலைந்த பின் பன்னிரெண்டு கூரைத்தகடுகளும் கிடைக்கின்றதாம். கிளிநொச்சி மாவட்டத்தில் மொத்தம் 23,122 குடும்பங்களே குடியமர்த்தப்பட்ட போதும் 10,000 குடும்பங்களுக்கே அரசாங்கம் நிவாரண செயற்திட்டம் போட்டு வைத்துக் காத்து நிற்கிறது. இந்தப் பத்தாயிரம் குடும்பங்களுக்காவது நிறைவான நிவாரணம் வழங்கியதாகத் தெரியவில்லை. அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கும் வீட்டுத்திட்டப் பணம் 3,25,000 ரூபாய், IOM கட்டிக் கொடுக்கும் தகர மலசல கூடங்கள், SLRC யின் வீட்டுத் திட்டம் போன்றன மக்களை சென்றடைவதே இல்லை. இவ்வாறான பல ஆவணங்களை அரசாங்க சேவைகள் திணைக்களத்தில் அவதானிக்க முடிந்ததே தவிர மக்கள் பெற்றுக் கொண்டதற்கான அத்தாட்சிகள் எதுவுமே இல்லை.

கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் நான்கு பிரதேச சபைகளான கராச்சி கண்டாவளை பூநகரி பச்சிலைப்பள்ளி போன்றவற்றில் பூநகரி பிரதேச சபையில் முழுமையாகவும் நாற்பத்திரெண்டு நகரங்களைக் கொண்ட கரச்சியில் முப்பத்திநான்கு நகரங்களும் பதினெட்டு நகரங்களைக் கொண்ட பச்சிலைப்பள்ளியில் எட்டு நகரங்களும் பதினாறு நகரங்களைக் கொண்ட கண்டாவளையில் பத்து நகரங்களுமே தற்போதைக்கு மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளன. இதற்கான காரணம் என்னவென்று சிவில் நிர்வாகத்தினரிடம் கேட்டால் நில வெடி பொருட்கள், கண்ணி வெடிகள் மற்றும் தாழ் வெடிகள் போன்றவை மக்களின் குடியிருப்புக்களில் இன்னமும் அகற்றப்படவில்லையென்று தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி சாந்தபுரம் வாசியான தவராஜா என்பவருடன் பேசினோம். 'என்ற மூத்த ஆம்பிளைப் பிள்ளையளை யுத்தத்தில பறி கொடுத்துப் போட்டு மிச்ச மூண்டு பிள்ளையளும் நானும் மனிசியும்தான் இங்க வந்தனாங்கள். வெறும் மூண்டு நாளில கிராம சேவகரிட்ட அத்தாட்சிப் படுத்திப் போட்டு போட்டோ பிடிச்சிட்டு அவையவையிண்ட காணியளுக்கு அனுப்பிடுவம் எண்டாங்கள். இப்ப ஒரு மாசமாகப் போகுது.. இன்னும் ஒண்டுமே இல்லை. இங்க இருந்துகொண்டு வேற எங்கயுமே போக வர ஏலாது. எங்கட காணிகளுக்கு தெரிஞ்சவையை விட்டு பார்ப்பிச்சால் அங்க உள்ள மரம், காய், கனிகளை எல்லாம் ஆமிக்காரன் அள்ளிக் கொண்டு கொழும்புக்கு போறதாச் சொல்லுறாங்கள். தூர்ந்த கிணத்துக்குள்ள இருந்து மண் எடுக்கிறாங்களாம். இடிந்து கிடக்கிற அத்திவாரத்து சீமெந்துக்கல்லுகளையும் பேர்த்து எடுத்து விக்கிறாங்களாம்' என்று அவர் மிகுந்த மனவேதனையுடன் கூறினார்.

55 வயதான பகவான் தினேஷ் ரூபன் என்பவர் 'எங்களுக்கு ஒரு நிவாரணச் சாமானுமே கிடைக்கயில்லை. இந்த தற்காலிக குடிசையைத் தவிர. நிவாரணம் கேட்டு நானும் மூண்டு வாரமா அலையுறன் மண்ணெண்ணெய் இல்லை, அரிசி இல்லை, கோதுமை மாவும் இல்லை. ராவுக்கு மண்ணெண்ணெய் இல்லாமல் லாம்பு கொழுத்தேலாமல் மூண்டு குமர்ப் பிள்ளைகளோடை ஒரு

## மரத்தால் விழுந்தவனை..!

வணக்கம் என் உறவுகளே!

விளக்கங்களும் நியாயங்களும் வீணாகிப்போய் விழவுகளைத்தேடும் விட்டில் பூச்சிகளாக எங்களின் வாழ்வுப் பயணம் வரிசையாய் நீண்டுகொண்டே செல்கிறது. உரிமை, ஜனநாயகம், சுதந்திரம் என்ற உயரிய வசனங்களையெல்லாம் கடந்து வெகுதூரம் பயணப்பட்டு விட்டோம். பல கதைகள் இனிப் பழங்கதைகளாகவேயிருக்கட்டும். இன்று வன்னிப் பெருநிலப் பரப்பில் ஒழிய செங்குருதி காய்ந்து கருகி சருகுகளுக்குள் சரித்திரமாய்த் தன்னைப் புதைத்துக் கொண்டிருக்கின்றது. ஆங்காங்கே புதிய ஜனனமாய்ப் பிறப்பெடுக்கின்றன கூடாரங்களும், கொட்டில்களும்.


மகா சரித்திரப் போரில் மாண்டவர்கள் போக மீண்டவர்கள் வந்திருக்கிறார்கள் மீள்குடியேற்றங்களுக்காக. அந்நியமாகிப் போன இந்தச்சனங்களின் நிதர்சனமான உண்மைகள் நிவாரணங்களுக்காகவும், நிலையான வாழ்வுக்காகவும் நிர்வாணமாய் ஆங்காங்கே அலைகின்றன. வீடிழந்து, சொத்திழந்து, உறவுகளையிழந்து அகதி முகாம்களுக்குள் மானமிழந்து மீண்டும் தம் மனைதேடி வந்திருக்கும் இவர்கள் வேண்டுவது நிறைவான வாழ்வும், நிம்மதியான சூழலுமே.

மீண்டும் முட்கம்பிப் புதர்கள் சூழ, இரும்புத்தொப்பிகளுக்கும் சப்பாத்துக் கால்களுக்கும் மத்தியில் இவர்களின் மறு வாழ்வுப்பயணம் தொடக்கிவைக்கப்பட்டிருக்கின்றது. இருந்தும், மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிக்க, மாடேறி மிதித்தவன் மேல் மரத்தை வெட்டிச் சாய்த்த கதையாக இம்மக்களுடைய சொத்துக்களும், சொந்தங்களும் சூறையாடப்படும் வேட்டையும் ஆரம்பித்திருக்கிறது. வன்மங்களுக்கும் வஞ்சனைகளுக்கும் வகைதெரியாது வாழ்ந்தவர்கள் மீண்டுவந்த வன்னி மண்ணில் வல்லூறுகளுக்கு இரையாகிறார்கள். மீண்டும் ஆரம்பித்திருக்கும் வல்லுறவுகளும், கொலை, கொள்ளைகளும் மீண்டுமொரு முடிவின் ஆரம்பத்தைத் தோற்றுவிக்குமோ என அஞ்சத் தோன்றுகின்றது.

பயமே வாழ்வாகி வதைபட்டுக் கொண்டிருக்கும் இவர்களின் இருப்பு, இரும்புக்கரங்களுக்கு இரையாகி கடைசியில் எலும்புக்கூடுகளாய் நடமாடும் சந்ததியாக மாறிவிடுமோ என்ற வினாவையெழுப்பி நிற்கின்றது. ஆங்காங்கே தோண்டத் தோண்ட வெளிவரும் எலும்புக் கூடுகள்கூட எக்காளச் சிரிப்பை உதிர்த்தவாறு மல்லாந்து கிடக்கின்றன.

மரமேறியவனை நோவதா? அல்லது மாட்டை நோவதா? அல்லது மரத்தை வெட்டிச் சாய்த்தவனை நோவதா? பெருநிலப்பரப்பின் புதைகுழிகளுக்குள்ளிருந்து வெளிவரக் காத்திருக்கும் எலும்புக்கூடுகள்தான் பதிலுரைக்க வேண்டும்.

உங்களைப்போல் நாளையும் விடியுமென்ற
நம்பிக்கை யுடன் காத்திருக்கும்



ஆசிரியர்.

இருக்கிறம்
15 - 06 - 2010



மாசத்துக்கு மேல கிடக்கிறம். அது குடுக்கிறம் இது குடுக்கிறம் என்டுறவங்கள். எங்களை கண்ணில எதை யுமே காட்டுறாங்கள் இல்லை. எல்லாத்தையும் வெளைக்கே கொண்டுபோய் பதுக்கிற்றான்கள். இரவானா இந்த அரணைக் கடிக்குள்ளே நாங்கள் பயந்து கொண்டு வாழுறம் . யுத்தம் நடக்கேக்க ஒரு பயம், இப்ப இந்தப் பயம்' கீழே குனிந்து அவர் சுட்டிக்காட்டிய அந்த மரத்தைப் பார்த்தேன். கிட்டத்தட்ட இரண்டடி நீளத்தில் நூற்றுக்கணக்கான அரணைகள் பட்டப் பகலிலேயே அங்குமிங்கும் சர்வசாதாரணமாய் அலைந்து திரிந்தன. அருகில் பாம்புப் புற்றுகள் வேறு. பகலிலே இப்படியென்றால் இரவில்.. நினைக்கவே மனம் வெதும்புகின்றது.

வன்னிப் பகுதியில் யுத்த நடவடிக்கைகளின்போது அவர்கள் தொலைத்த காணி உறுதிப் பத்திரங்கள் சோலை வரி ஆவணங்கள் போன்றவற்றை அவர்களால் கச்சேரி அலுவலகத்தில்கூடப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. அங்கும் அவை இல்லை என்றே கை விரிக்கப்படுகின்றது. உண்மையில் இந்த ஆவணங்களுக்கு என்ன நடந்தது? என்று ஆராய்ந்தபொழுது பெரும்பாலானவை கிழித்து வீசப்பட்டுள்ளதாயும் சில ஆவணங்கள் எரிக்கப்பட்டுள்ளதாயும் திடுக்கிடும் தகவலொன்று கிடைத்தது. தமிழர்களுடைய நிலங்கள் துண்டாடப்படல், அபகரிக்கப்படல் போன்றன அதிகரித்து வரும் இந்நிலைமையில் விஸ்வமடு முல்லைத்தீவு மாவட்டங்களில் ஒருவர் எத்தனை ஏக்கர் காணி வைத்திருப்பினும் மீள் குடியேற்றத்தின் பெயரில் ஒரு ஏக்கர் காணியே மீள வழங்கப்படுகின்றது. வளச்சுரண்டல் மிகப் பரந்தளவில் கிளிநொச்சி மாவட்டத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இப்பிரதேசத்திலுள்ள மணல்மண், தரிக்கப்பட்ட மரப்பலகைகள், குடியேறாத மக்களின் வீட்டுத் தோட்டங்களிலுள்ள வளங்கள் போன்றவை இலவசமாக தென்பகுதிக்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது பற்றி எந்தத் திணைக்களங்களும் கவனிப்பதாய்த் தெரியவில்லை.


தவராஜா

பெரும்பாலும் கிளிநொச்சி நகரப்புறப் பகுதியில் பாதிப்படையாத கல்வீடுகளில் சிவில் இராணுவ உயர் அதிகாரிகளே வசிக்கின்றனர். மீளக் குடியேற்ற மக்கள் வந்த பின்னரும்கூட அவர்கள் தமது உறவினர்கள் வீடுகளில் தற்காலிகக் கொட்டில்களிலேயே வசிக்கிறார்கள். மாலை நேரங்களில் இராணுவக் கொட்டில்களில் கள்ளச் சாராயமும் கசிப்புத் தயாரிப்பும் தாராளமாகவே நடைபெறுகிறதாம். எத்தனை காலத்துக்குத்தான் இப்படி வெறுத்துப்போய் வாழ்க்கையுடன் போராடிக் கொண்டிருப்பது என மெல்ல மெல்ல மலிவு விலையில் கிடைக்கும் இக் குடிபானங்களுக்கு இம்மக்கள் அடிமையாகத் தொடங்கியிருப்பது மற்றுமொரு வேதனையான விடயம்.

ஒருகாலத்தில் மிகுந்த கட்டுப்பாடுகளும் கலாச்சார ஒழுக்கங்களும் நிறையப்பெற்று தமிழைத் தாயெனப் போற்றி, போராட்ட உணர்வுகளுடன் ஒன்றரக்கலந்து, வந்தாரை வாழவைத்து பெயர்பெற்ற வன்னி மக்கள், இன்று நடுத்தெருவில் நாய்களைப்போல் சீரழிந்து சின்னாபின்னமாகி இவ்வளவு இழந்தபின்னும் ஏன் இன்னமும் எங்களை உயிரோடு விட்டிருக்கின்றார்கள் என்று எங்களைப்பார்த்துக் கேட்கின்றநிலை மிகவும் வேதனையாகத்தான் இருக்கின்றது. மீள் குடியேற்ற அமைச்சரே இது உங்களின் கவனத்திற்கு.......




பிறகென்னத்துக்கு பாத்துக் கொண்டு நிக்கிறியள்...
அதுதான் வீடு கட்டித்தர காசில்ல எண்டு முதலே
சொல்லிப்போட்டன் தானே.. !!!!
பாதுகாப்பு செலவீனம்
20,100 கோடி
வீடுகளை அமைக்க
இந்தியா வழங்கியது
1,000 கோடி
15/06/2010.



# அவருக்கு பாஸ் கிடைத்து விட்டது!

செங்கை ஆழியான்

கந்தசாமி மாஸ்ரர் விண்ணப்பப்படிவத்தை பவ்வியமாக அவனிடம் நீட்டினார். வலு மரியாதையாகத்தான் நீட்டினார். யாழ்ப்பாணத்துக்கு வெளியே செல்வதற்கு இயக்கத்திடம் அனுமதிப் பாஸ் பெற வேண்டும். பாஸ் கொடுக்கிற பொடியளும் அந்தப் பணிமனையில் வேலை செய்பவர்களுக்கும் ஏதோ உலகம் தங்களால்தான் இயங்குகிறது என்ற எண்ணம். எத்தனை பேரின் விண்ணப்பத்தை பாஸ் பண்ணி அங்கால் அனுப்புவதிலும் எத்தனை பேரின் விண்ணப்பத்தை நிராகரித்து மறிக்கலாம் என்பதில் நாட்டம். தாங்கள் அங்கால் இங்கால் நகர முடியாமல் இங்கேயே முடங்கிக் கிடக்க யாழ்ப்பாணத்துச் சனம் உலகம் சுற்றுவதா?

கந்தசாமி நீட்டிய விண்ணப்பத்தைக் கண்ணன் அலட்சியமாக வாங்கிக்கொண்டான்.

'எங்கை போறீர்?'

'அதுக்குத்தானே கொடுத்திருக்கிறன். போற வாற இடம் அதில இருக்குது?'

'அது எனக்குத் தெரியும். நீர் கேட்டதுக்குப் பதில் சொல்லும். வாய்க்குள்ள என்ன கொழுக்கட்டையே?' எங்க போகப் போறீர்? என்று காட்டமாக மீண்டும் கேட்டான். இவனோடு கொளுவிக்கொள்ளக் கூடாது. காரியமாக வேண்டும்.

'கொழும்புக்கு மகளையும் பிள்ளையளையும் கூட்டிப் போறன். அக்கா பிரான்சிலிருந்து விசாவோட வாறா. மருமகளைக் கூட்டிப் போகப்போறா. அங்க அவன் எவ்வளவு நாள்தான் தனிய இருக்கிறது?'

'ஓ மருமகன் பிரான்சிலயோ? அவர் அங்க எப்ப போனவர்' என்று கண்ணன் கேட்டான்.

'அவர் போய் கனகாலம் தம்பி. பாஸ் முறைக்கு முன்னம் போய்விட்டார். அவர் யாழ்ப்பாணத்தில் கலியாணம் கட்டினார். மூன்று பிள்ளையளும் மனிசியும் இங்க இருக்கினம். அதுதான் கூட்டிப்போக அக்கா வாறா'

'எல்லாற்றையும் ஐசிகளை எடுங்கோ..'

அவர் எடுத்துக் கொடுத்தார். அவன் வாங்கித் துருவித் துருவிப் பார்த்தான்.

'உங்கட குடும்ப அட்டையை எடுங்கோ'

அவர் எடுத்துக் கொடுத்தார்.

'உங்கட துணைப்படை பயிற்சி முடித்த அட்டை எங்க? பயிற்சிக்குப் போனனீங்களே?'

'எல்லாரும் போகத்தானே வேணும். வயது இதில முக்கியமல்ல. போனனான். இன்னமும் நாலு நாள் முடிய இருக்குது. அதுக்குள்ள அக்கா பிரான்சிலிருந்து வந்திட்டா. பயிற்சி அட்டை முடியத்தானே தருவினம். கொழும்புக்கு போட்டு வந்து எடுக்கிறன்'

'அது ஏலாது பயிற்சியை முடிச்சிட்டு வாரும்...'

'அதுக்குள்ள அக்காவின்ரை லீவு முடிஞ்சிடும். போக வேணும்... ஒருக்கா பாக்க வேணும்'

'அதுக்கு நானென்ன செய்ய? பாக்க வேணுமெண்டால் அக்காவை இங்க வரச்சொல்லுமன். இங்கால வரமாட்டினமே? வெளிநாட்டுக்காரர் கொழும்போட திரும்பி விடுகினம்'

அவருக்கு ஆத்திரமாக வந்தது.

'வரத்தான் விடுகிறியலில்லையே? வந்தால் அங்க இங்கயெண்டு அலைக்கழிக்கிறியள். பூந்தோட்டம் முகாமிற்கு போகச் சொல்லுறியள். வலது குறைந்தோரைப் பராமரிக்கவென டொலரில் காசு

நன்கொடை முறிகண்டியில் கேட்டு ரிக்கற் வேறை விக்கிறியள். காசு தராட்டில் பங்கரில கேட்டுப் போடு றியள். இங்க வந்தவைக்கு நடந்தவற்றைக் கேள்விப் பட்டால் ஆரும் வருவினமே?'

'நான் கனக்கக் கதைக்கவில்லை. உண்மை யைத்தான் சொல்லுறன். பாஸ் எடுக்க விண்ணப்பிச்ச பிள்ளையளில வயது வந்ததுகள் இருக்குது என்பியள். நீங்கள் தரமாட்டியள் என்பது தெரியும். என்ரை மருமகன் பிரான்சில் பெரிய புள்ளி. இயக்கத்துக்கு இவ்வளவு வருடங்களாக சம்பளத்திலிருந்து ஒரு பங்கை மாதச் சந்தாவாகக் கட்டிவாறார். ரிசீற்றுக்கள் இருக்கு'

'இப்படிக் கனபேர் சொல்லுகினம். முதலில பயிற்சியை முடியும். பார்ப்பம். உமக்கு மட்டும் வயதைப் பொறுத்து வேணுமெண்டால் பாஸ் தாறன். மகளுக்கும் பிள்ளையளுக்கும் தரேல்லாது'

விண்ணப்ப பத்திரங்களை 'நிராகரிக்கப்பட்டன' எனச் சிவப்பு மையால் கோடிட்டு திருப்பிக் கொடுத் தான்.

'திருப்பித் தந்திட்டீர்.. பாரும். நான் எப்படி உம்மிடமே இவர்களுக்கு பாஸ் எடுக்கிறனென' கந்தசாமி மாஸ்ரர் பொருமினார்.

கோபத்தோடு கந்தசாமி மாஸ்ரர் வீட்டுக்குத் திரும்பிவந்தார். அவருடைய மனைவி தீயில் நெய் இட்டாள்.

'கொளுவிப்போட்டு வந்திருக்கிறியள். இனி எடுத்த மாதிரித்தான். முதலில றெயினிங்கை முடியுங்கோ. இன்னமும் மூன்று நாள்தானே?'

'என்னால இயலாதப்பா. அந்த வெயிலுக்க கொட் டானைத் தூக்கிக்கொண்டு ஓட முடியாது. நெஞ்சுக்கை சாதுவா வலிக்கிறமாதிரிக் கிடக்குது.'

'சொல்லுங்கோவன்'

'சொன்னால் டொக்டரிட்ட அனுப்புவான்கள். பரிசோதி என்பான்கள். அதுகள் கற்றுக் குட்டிகள். வருத்தம் இல்லை என்பினம். சரி சரி.. நாளைக்குப் போறன். முதலில் பிரான்சுக்கு ஒரு போன் கோல் மருமகனுக்கு எடுக்கப்போறன். அதற்காகக் காசு கட்டின எல்லா ரிசிற்றின்ர கொப்பியையும் அனுப்பி மேலிடத்துக்கு விண்ணப்பிக்கச் சொல். ஒழுங்கா மாதாமாதம் காசு கட்டினவைக்கு பாஸ் இல்லை எண்டால்... இது என்ன நியாயம்? ஆருக்கும் பாஸ் கொடுக்கவில்லையே? கெங்காதரனின்ர பொடிச்சி எப்படிப் போனவை?' என்றார் கந்தசாமி.

கெங்காதரனின்ரை மூத்த பையன் வீரமரணம் அடைந்தவன். இரண்டாமவன் இயக்கத்தில் போரா ளியாக இருக்கான். மோளுக்குக் கொடுத்தினம். ஏன் யோகம்மாவின் மோளுக்கு அவளின்ர வீட்டை எழுதி வாங்கிக்கொண்டுதான் போகக் கொடுத்தவையாம். வயது வந்த பிள்ளையள் மூன்று பேருக்கு ஒண்டாத் தர மாட்டினம். எக்கணம் போறது கடினம்தான். நீங்கள் வேறு கொளுவிப் போட்டு வந்திருக்கிறியள்.'

நீ இருந்து பார்... பிரான்சுக்குப் போறதுக்கு பாஸ் கிடைக்கும்'

காலையே பயிற்சிக்குப் போனார். இந்த வயதிலே வெயிலுக்குள் நிற்பது கஷ்டமாக இருந்தது. கொட் டானைத் தூக்கிக்கொண்டு மைதானம் முழுவதும் ஓடுவது சிரமமாக இருந்தது. பயிற்சிக்குப் பொறுப் பானவன் கொஞ்சமும் இரக்கம் காட்டவில்லை. தன் இயலாமையைச் சொன்னார்.

'நீர் போய் சேர்டிபிக்கேற் வாங்கி வாரும். செய்ய இயலாதென்று... நானொன்றும் செய்யவியலாது. இன்னமும் இரண்டு நாள் தானே? பல்லைக்கடித்துக் கொண்டு செய்து முடியும்' என்றான்.

டொக்டரைச் சந்தித்தார். தன் இயலாமையைச் சொன்னார். பரிசோதித்துப் பார்த்தார்.

'உப்பிடிக் கனபேர் வருகினம். ஆருக்கும் சேர்டி பிக்கெற் கொடுக்க முடியாது. உங்களுக்கு ஒண்டு மில்லை. நெஞ்சு நோ இருப்பதாகத் தெரியவில்லை. யு ஆர் பிற்...'

ஏமாற்றத்தோடு திரும்பி வந்தார். பயிற்சியை முடிக்காவிட்டால் பங்கரில் கிடக்கவேண்டும்.


கடைசி நாள் பயிற்சி கடினமாக இருந்தது. அவ ரால் ஓட முடியவில்லை. நடக்கவும் முடியவில்லை. நெஞ்சு இறுக்கிக்கொண்டது. அப்படியே இருந்து விட்டார். இருக்கவும் முடியவில்லை. நிலத்தில் சரிந்துவிட்டார். சரியும்போது எண்ணிக் கொண்டார். 'பாஸ் கிடைத்தால் எல்லாரும் போயிடலாம்.'


மோட்டார் சயிக்கிலில் வந்த கண்ணனும் இன் னொருவனும் கந்தசாமி மாஸ்ரர் வீட்டின் வாசலில் வந்திறங்கினர். வீட்டில் அழுகுரல் ஒலித்தது.

'என்ன தம்பிமார் விடயம்?'

'கந்தசாமியருக்கும் மற்ற நான்கு பேருக்கும் வெளியில் போக பாஸ் கொடுக்கச் சொல்லி விட்டினம். அனுமதி கிடைச்சிட்டுது'

கந்தசாமி மாஸ்ரருக்கு முதலிலேயே அங்கால் போகப் பாஸ் கிடைத்த விபரம் கண்ணனுக்கு உடன் தெரிய நியாயமில்லை.






# காற்றாய் வருவேன் 7

அவனுக்கு வேண்டிய பாதையில் கார்
போகவில்லை. அது,
வேறு எங்கோ போய்க் கொண்டிருந்தது.
"ஏய் டிரைவர் நீ எங்கே போகிறாய்? நான்
சன்பிளவர் ரெஸ்ட்டூரண்டுக்கு அல்லவா போகச்
சொன்னேன். காரைத் திருப்பு" என்றான் கடுகடுப்புடன்.
ஆனாலும்,
அவன் சொன்னதை காதில் வாங்கிக்
கொள்ளாதவனைப் போல்,
டிரைவர் அவன் செல்லும் பாதையிலேயே
காரை செலுத்திக் கொண்டிருந்தான்.
இதனால், மனோகரனுக்கு
ஆத்திரம் அள்ளிக்கொண்டு வந்தது.
"டேய் முட்டாள்... நான் சொன்னது உன்
காதில் விழவில்லையா... காரை நான் சொன்ன
இடத்திற்கு திருப்பி ஓட்டு" என்று கத்தினான்.
இதனால், சீதா பரபரப்படைந்தாள்.
"அவசரப்படாதீர்கள் மனோ. இப்போது நாம் எனது
ரூமுக்குப் போவோம். அங்கு யாரும் இல்லை"
சொல்லியபடியே,
அன்புடன் அவன் கரத்தைப் பற்றிக்கொண்டாள்.
இதனால்,
மனோகரன் கொஞ்சம் சாந்தமடைந்தான்.
கார் இப்போது,
மல்லிகாவின் பங்களாவை நோக்கி போய்க்
கொண்டிருந்தது. சிறிது நேரத்தில்,
அந்த பங்களாவின் முன்னால் கார் நின்றது.
அந்த இடம் எது என்பதை பார்ப்பதற்கு
அவனுக்கு அவகாசம் கொடுக்காமல்,
மனோகரனையும் இழுத்துக்கொண்டு,
உள்ளே ஓடினாள் சீதா.
அவர்கள் உள்ளே வந்ததும்,
"கீச்ச்..." என்ற ஓசையுடன் கதவு சாத்திக்கொண்டது.
கொஞ்சம் பரபரப்புடன் திரும்பிப்பார்த்தான்
மனோகரன்.
வழக்கத்தை விட,
அன்று உள்ளே வெளிச்சம் கொஞ்சம்
அதிகமாகவே இருந்தது. இதனால்,
அந்த பங்களாவின் முன் பகுதியை
மனோகரனால் பார்க்கக் கூடியதாக இருந்தது.
அந்த சுற்றுப்புறம்,
ஒருவிதமான பயங்கரத்தை ஏற்படுத்துவதைப்
போல் அவனுக்குத் தோன்றியது.
அந்த அறைக்குள் இருந்த பொருட்களை
எல்லாம், இதற்கு முன்னர்
பார்த்ததாக ஞாபகம்.
அதாவது, இதற்கு முன்பு
அந்த பங்களாவிற்கு அவன்
வந்திருக்கிறான் என்பது அவனுக்குப் புரிந்தது.
அதே நேரம்,
பயங்கரமான சிரிப்பொலி ஒன்று கேட்டது.
இதனால், அவன் மேனியில்

ஒரு நடுக்கம் ஏற்பட்டது.
கொஞ்சம் கதிகலங்கி போன அவன்,
மெல்லத் திரும்பி, சீதாவைப் பார்த்தான்.
அப்போது,
"சீதா, நீ உன் ரூமுக்குப் போ!" என்று ஒரு
குரல் கட்டளையிட்டது.
குரல் வந்த திசையில் திரும்பினான் மனோகரன்.
அங்கே, ஒரு பெரிய படம்.
அந்தப் படத்தைப் பார்த்ததும்,
அவன் இதயம் வேகமாக இயங்கியது.
அது நின்றுவிடுமோ என்றுகூட அவன் அஞ்சினான்.
அந்தப் படத்தில் இருந்த பெண்,
அவனுக்கு நன்கு அறிமுகமானவள்தான்.
தான் ஏதோ ஒரு ஆபத்தில் மாட்டிக்
கொண்டதைப் போல் அவன் உள்ளுணர்வு
சொல்லியது. அதே நேரம்,
அந்தப் படத்தில் இருந்த பெண்
அவனைப் பார்த்துச் சிரித்தாள்.
"என்னடா உனக்கு என்னை ஞாபகம்
இருக்கிறதா?" படம்தான் பேசியது.
மனோகரன், அதிர்ந்துபோய் நின்றான்.
என்ன நடக்கப் போகிறது என்பது இப்போதுதான்,
மனோகரனுக்கு கொஞ்சம் கொஞ்சமாகப்
புரிய ஆரம்பித்தது.
இந்த இடத்தை அவன் பார்ப்பதற்கோ,
திரும்பவும் ஒருமுறை வருவதற்கோ
அவன் விரும்பவில்லை.
வரக்கூடாத இடத்திற்கு வந்துவிட்டதைப் போன்ற
ஓர் உணர்வு இப்போது அவனுக்கு ஏற்பட்டது.
ஆனாலும், அவன் செய்த செயலுக்கு
தண்டனை அனுபவிக்கவேண்டிய
நேரம் வந்துவிட்டதை அவன் உணர்ந்து கொண்டான்.
"மிஸ் மல்லிகா தயவுசெய்து என்னை மன்னித்துக்
கொள்ளுங்கள். எனக்கு அனுதாபம் காட்டுங்கள்" அவன்
மன்றாடி நின்றான்.
" ஹாக்.. ஹக்.. ஹ... மன்னிப்பா..? உனக்கா..? உன்மீது
கருணை காட்ட வேண்டுமா? இதே போல்தானே நான்
அன்று உன் காலில் விழுந்து எனக்குக் கருணை
காட்டுங்கள்,
என்று கெஞ்சி மன்றாடினேன். ஆனால் நடந்தது என்ன?
நீயும் உன் நண்பர்களும் என்மீது காட்டிய கருணை
எப்படிப்பட்டது என்று தெரியும்தானே? அன்று வீரனாக
இருந்த நீ இன்று கருணை காட்டும்படி
கெஞ்சுகிறாயே.. உனக்கு வெட்கமாக இல்லை?
உன்னைப் போன்ற மிருகங்களுக்கு எனது
சாம்ராஜ்ஜியத்தில்
மன்னிப்பே இல்லை. நான் இறந்தாலும்
ஆவியாக வந்தாவது உங்கள் எல்லோரையும் பழி
வாங்குவேன் என்று அன்று நான் சொன்னது உனக்கு
ஞாபகம் இருக்கிறதல்லவா? ஹக்..ஹக்...ஹக்..."
அந்த பயங்கர சிரிப்பு,
மனோகரனின் மேனியை புல்லரிக்கச் செய்கிறது.
"பிளீஸ் மல்லிகா என்னை மன்னித்து விடுங்கள்" சிறு
குழந்தையைப் போல் அழுதான் மனோகரன்.
அதைக் கேட்டதும்,
படத்திற்குள் தெரிந்த மல்லிகாவின் உருவம் மீண்டும்
பயங்கரமாகச் சிரித்தது. அதே நேரம்,
ஆச்சரியமான சம்பவம் ஒன்றும் நடைபெற்றது.
வெள்ளை புகை மண்டலம் ஒன்று அலையாக வந்து,
சீதாவின் மேனியில் சங்கமமாகியது.

அடுத்து, மந்திர சக்தியால் கட்டுண்டவளைப்போல்
செயல்பட்ட சீதா, விழிகளை உருட்டி,
மனோகரனைப் பார்த்தாள்.
ஆ! என்ன பயங்கரம்?
பெரிய அந்த விழிகளின் பார்வை,
மனோகரனை கதிகலங்க வைத்தது.
இப்போது மல்லிகாவின் படம் மீண்டும் பேசியது.
"சீதா நான் சொல்வதை நன்றாகக் கேட்டுக்கொள்.
இப்போது உன் எதிரில் நிற்கிறானே, இவன்தான்
என்னைக் கொலை செய்த கொலைகாரன்.
இவனுக்கு கொஞ்சமும் அனுதாபம் காட்டாதே.
எனக்கு நீதான் ஜீவன் கொடுக்க வேண்டும்.
இவனுடைய இரத்தத்தினால்தான் அதை நீ செய்ய
முடியும்" படம் இப்படிச் சொன்னதும்
நடுநடுங்கிப் போனான்,
படாரென்று திரும்பி சீதாவைப் பார்த்தான்.
இப்போது,
அவள் கையில் கூர்மையான கத்தி.
பளபளக்கும் அந்தக் கத்தியை முன்னால்
நீட்டியபடியே, மெல்ல மெல்ல
மனோகரனை நோக்கி ஊர்ந்தாள் சீதா.
"ஐயோ... வேண்டாம் ரேணுகா. என்னை
ஒன்றும் செய்யாதீர்கள், நடந்த தவறுக்கு நான் மட்டும்
காரணம் அல்ல. நான் உண்மையைச்
சொல்லிவிடுகிறேன்.
எனக்கு அனுதாபம் காட்டுங்கள்" நடுங்கியபடியே,
கெஞ்சினான் மனோகரன்.
அவன் சொன்னதைக் கேட்டுவிட்டு
பயங்கரமாகச் சிரித்தாள் சீதா
சிரித்துவிட்டு,
"அப்படியா... அப்படியானால் உன் வீர
பிரதாபங்களைச்
சொல்லு பார்க்கலாம்" என்று சொல்லியபடியே,
கத்தியை உயர்த்திக்கொண்டு நின்றாள்.
"அன்று ஒரு மழை நாள். நானும் எனது நண்பர்கள்
மூன்றுபேரும் கிளப்பில் இருந்து பியர்
குடித்துக்கொண்டிருந்தோம்.
எனது நண்பர்கள் ராஜா, குமார், மோகன்.
மூன்றுபேரும் நல்ல போதையில் இருந்தார்கள்.
திடீரென்று மூடியிருந்த கிளப் கதவை யாரோ
தட்டினார்கள்.
நான்தான் போய் கதவைத் திறந்தேன்.

வாசலில் மிஸ் மல்லிகா நன்றாக மழையில்
நனைந்துபோய் நின்றுகொண்டிருந்தார்கள். என்ன
மிஸ் மல்லிகா இந்த நேரத்தில்?" என்று வியப்போடு
கேட்டேன்.
"மிஸ்டர் மனோகரன் எனது கார் இடைவழியில்
நின்றுவிட்டது. என்ன காரணமென்று தெரியவில்லை.
மழை வேறு பெய்துகொண்டிருக்கிறது. நான்
பங்களாவிற்கு
போவதற்கு உதவி செய்ய முடியாதா" என்று
என்னிடம் கேட்டார்கள்.
"மிஸ் மல்லிகாவிற்கு உதவி செய்ய விரும்பிய
நான் எனது காரிலேயே அவர்களை ஏற்றிச் செல்வதற்கு
முடிவு செய்தேன். அதை எனது நண்பர்களிடமும்
சொன்னேன். ஆனால் நான் தனியாக போவதற்கு
அவர்கள் சம்மதிக்கவில்லை. அதனால் அவர்கள்
மூவரும்
என்னுடன் வருவதற்கு பிடிவாதம் பிடித்தார்கள்.

வேறு வழியின்றி நான் அவர்களையும் என்னுடன் கூட்டிச் சென்றேன்.
நாங்கள் ஐந்துபேரும் பங்களாவிற்குப் போய் சேர்வதற்கு நள்ளிரவாகிவிட்டது. நாங்கள் அங்கே சென்றதும் உள்ளே வரும்படி மிஸ் மல்லிகா அழைத்தார்கள்.
நாங்கள் உள்ளே போனதும் நல்ல போதையில் இருந்த எனது நண்பன் ராஜா, கொஞ்சமும் எதிர்பாராத விதத்தில் மிஸ் மல்லிகாவைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டான். இதனால் தடுமாறிப்போன மிஸ் மல்லிகா அப்படியே கீழே விழுந்தார்கள். அவர்கள் கீழே விழுந்ததும் அவர்கள் அணிந்திருந்த சட்டைப் பாவாடை விலகியது.
அந்தக் காட்சியைப் பார்த்ததும் நல்ல போதையில் இருந்த எங்கள் உணர்ச்சிகள் தூண்டப்பட்டன.
அடுத்து நாங்கள் நால்வரும் பாய்ந்து சென்று மிஸ் மல்லிகாவை முத்தமிடுவதற்குப் போராடினோம். இதனால் அவர்களின் உடைகள் எல்லாம் கிழிந்து போய்விட்டது"

"அதன் பிறகு என்ன நடந்ததென்று எங்களுக்கு தெரியவில்லை. ஒருவர் மாறி ஒருவர்...
மல்லிகா கத்தாமல்
இருப்பதற்காக நான்தான் அவர்களின் கழுத்தை அழுத்திப் பிடித்துக்கொண்டேன். ஆனால் அந்த அழுத்தம் அதிகமாக இருந்திருக்க வேண்டும். அதன் பிறகுதான் தெரிந்தது மிஸ் மல்லிகா இறந்து விட்டார்கள் என்று...
இதனால் நன்றாகப் பயந்துபோன நாங்கள்,
பக்கத்து ரூமில் இருந்த ஒரு பெரிய இரும்புப் பெட்டிக்குள்
மல்லிகாவின் பிணத்தை தூக்கிப் போட்டு விட்டு அங்கிருந்து ஓடிப்போய் விட்டோம்.
மல்லிகாவின் அந்த உடலின் கவர்ச்சிதான் எங்களை இப்படிச் செய்யத் தூண்டியது. நாங்கள் மட்டுமல்ல அவளை அந்த நிலையில் ஒரு கிழவன் பார்த்திருந்தால் கூட இதைத்தான் செய்திருப்பான். இதனால் என்மீது கருணைக் காட்டுங்கள்" சொல்லியபடியே இரண்டு கைகளையும் கூப்பி சீதாவைக் கும்பிட்டான். ஆனால்,
அதற்குள் சீதாவின் கையில் இருந்த கத்தி அவன் மார்பை நோக்கி வேகமாகச் சென்றது
சரக்!
அடுத்து,
அம்மா என்று அலறியபடியே தரையில் சாய்ந்தான் மனோகரன்.
அவன் கீழே சாய்ந்ததும்
பைத்தியக்காரியைப் போல் செயல்பட்ட சீதா எதிரில் இருந்த அறைக்குள் ஓடினாள்.
உள்ளே ஒரு இரும்புப் பெட்டி இருந்தது.
அதன் அருகில் ஓடி வந்து
பரபரப்புடன் அதைத் திறந்தாள்.
உள்ளே,
மல்லிகாவின் பிணம் பாதுகாப்பாக வைக்கப் பட்டிருந்தது. அதை அப்படியே திறந்து வைத்துவிட்டு மீண்டும் மனோகரன் விழுந்திருந்த இடத்திற்கு ஓடிச்சென்ற சீதா,
மனோகரனின் நெஞ்சில் இருந்து வடிந்து கொண்டிருந்த சூடான இரத்தத்தை இரண்டு கைகளிலும் சேகரித்தாள்.
கைகளில் சேகரித்த அந்த சூடான இரத்தத்தை அப்படியே கொண்டுசென்று
பெட்டிக்குள் பிணமாகக் கிடந்த மல்லிகாவின் வாய்க்குள் கொட்டினாள்.
என்ன ஆச்சரியம்!
தாகத்தினால் இருக்கும் ஒருவருக்கு நீர் கொடுத்தால் அதை எப்படி உறிஞ்சிக் குடிப்பாரோ
அதே போல்,
இதழ்களில் விழுந்த அந்த சூடான இரத்தத்தை பெட்டிக்குள் கிடந்த மல்லிகாவின் பிணம் உறிஞ்சிக் குடித்தது.
இரத்தம் உள்ளே சென்றதும்,
பிணத்தின் நிறம் கொஞ்சம் கொஞ்சமாக மாறத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து ஆச்சரியமான சம்பவம் ஒன்று நடந்தது.
ஆமாம்..
இதுவரை பிணமாகக் கிடந்த மல்லிகா
மெல்ல விழிகளைத் திறந்து,
சுற்றும் முற்றும் பார்த்தாள்.
அதைப் பார்த்ததும்
சீதா அப்படியே மயங்கி
விழுந்துவிட்டாள்...

**மர்மம் தொடரும்...**





# பெண்ணும் உத்தியோகமும்

தேவி – இப்ப கொஞ்ச நாளா சில விஷயங்களைப் பற்றி யோசிச்சுக் கொண்டிருக்கிறன் மாமி. இதுகளைப்பற்றி உங்கட கருத்துக்களையும் அறிஞ்சால் நல்லது எண்டுதான் நானும் ரவியும் உங்களை பீச்சுக்குக் கூட்டிக்கொண்டு வந்தனாங்கள் மாமி...

கமலா – மனத்திலை இருக்கிற விஷயங்களை வெளி வெளியாக் கதைக்கிறது நல்லது தேவி. அப்பதான் பிரச்சினைகள் இருந்தால் தீர்வு காணலாம்.

தேவி – உங்களுக்குத் தெரியும். எனக்கு எஞ்சினியரிங்கில டிகிரியும், எம்.பி.ஏ யும் இருந்ததால ஒரு நல்ல கொம்பனில நல்ல வேலை கிடைச்சுது. பிறகும் புரமோஷன்கள் கிடைச்சு இப்ப நல்ல நிலமையில இருக்கிறன்.

கமலா – உண்மைதான் அது பெருமைதானே.

தேவி – நான் சொல்ல வந்தது என்னெண்டால் எங்கட பிள்ளையள் பள்ளிக்கூடம் போகத் தொடங்கிட்டாலும் இன்னும் சின்னப்பிள்ளைகள்தானே. சமையல் சாப்பாடுகளையும் கவனிக்க வேணும். அதுகளின்டை படிப்பையும் கவனிக்க வேண்டியிருக்கு. இப்ப வேலையையும் வீட்டையும் சமாளிக்கிறது கஷ்டமாயிருக்கு. பிள்ளைகளை நல்லபடியா வளர்க்கோணும் எண்டால் வேலையை விட்டால்தான் முடியும்போல இருக்கு. எனக்கு வேலையை விடவும் மனமில்லை. இந்தமாதிரி நல்ல வேலை செய்ய வேணும் என்றதுதான் என்ட சின்ன வயசுக் கனவாயிருந்தது.

ரவி – நீர் வேலையை விடவேண்டிய அவசியமே இல்லை தேவி. ஏன் இப்படியெல்லாம் யோசிக்கிறீர்?

தேவி – ஆனால் பிள்ளையளுக்கு அடிக்கடி வருத்தங்கள் வருகுது. பெறுத்த வேலைகள் இருக்கிற நேரங்களிலை லீவு எடுக்க முடியாமல் இருக்கு. இதுகும் ஒரு பிரச்சினையல்லே?

கமலா – இந்தப் பிரச்சினை பல குடும்பங்களிலை இருக்கு. இதுக்குத் தீர்வு, முதலில் இருவருக்கும் இடையில் நல்ல புரிந்துணர்வு இருக்கவேணும். பொறுப்புகளை ரெண்டு பேரும் பகிர்ந்து செய்ய வேண்டும். எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் ஒருவருக்கொருவர் ஆதரவாய் இருக்கவேணும்.

ரவி – சரியாச் சொன்னீங்கள் மாமி... நான் ஒருத்தன் இருக்கிறன் எண்ட நினைப்பே தேவிக்கு இல்லை போல இருக்கு. தேவியாலை லீவு எடுக்க முடியாத நாளேல நான் லீவு எடுப்பன். பிள்ளைகளோட தேவி நேரம் சிலவழிக்கிற நாளில நான் சமையல் சாப்பாடுகளைக் கவனிச்சுக் கொள்ளுவன். இப்படி பகிர்ந்து செய்யலாமெல்லே...

தேவி – இதால அவற்றை வேலையெல்லோ பாதிக்கப் படப்போகுது. அவருக்கும் அடுத்த வருஷம் கண்டிக்கு ட்ரான்ஸ்பர் வரப்போகுதாம். அப்பிடி வந்தா நான் எப்படியும் என்டை வேலையை விடத்தானே வேணும். எனக்கு ஒருநாளும் கண்டிக்கு ட்ரான்ஸ்பர் கிடைக்காது தானே.

ரவி – ஒண்டையும் பிரச்சினையாய் யோசியாதையும். ட்ரான்ஸ்பரிலை போகச் சொன்னால் தீர்மானமாக போக ஏலாது எண்டுதான் சொல்லப் போறன்.

தேவி – அப்படியெண்டால் நீங்கள் வேலையை விட வேண்டியெல்லே வரும்?

ரவி – இங்கேயே வேறொரு நல்ல வேலை கிடைச்சால் எடுத்துச் செய்யலாம். வேலையையும் குடும்பத்தையும் சமாளிக்க முடியாது என்ட ஒரு நிலவரம் வந்தால் நான் சில வருஷங்களுக்கு வேலையை விட்டுப்போட்டு வீட்டிலை நிக்கிறன். நீர் எவ்வளவோ காலமாய் ஆசைப்பட்ட வேலையை ஏன் விட வேணும்?

தேவி – ஆ... ரவி உண்மையாகத்தான் சொல்லுறியளே? எண்டாலும் அப்படி என்வண்டு செய்யிறது?

கமலா – ஏன் அப்படிச் செய்ய ஏலாது? ரவி சொன்னது தான் சரி.. பொம்பிளைதான் வேலையை விட வேணும் எண்டு சட்டம் ஏதும் இருக்கோ? உண்மையிலை ரவியைப்போல சிந்தனை உள்ளவை எல்லாப் பொம்பிளையளுக்கும் கிடைச்சால் குடும்பங்களில ஒருவித தகராறோ பிரச்சினைகளோ இருக்காது.

தேவி – உண்மைதான் மாமி. எனக்கும் மனதிலை இப்ப எதையும் சமாளிக்கலாம் எண்ட நம்பிக்கை வந்திட்டுது.



'தமிழர்கள் ஒற்றுமைப்படவேண்டும்'. 'தமிழ்க் கட்சிகள் ஐக்கியப்படவேண்டும்'. 'தமிழ்த்தலைவர்கள் ஒன்றுசேர வேண்டும்'. இந்த ஒற்றுமைக்குரல்கள் இன்று நேற்றல்ல. இலங்கை சுதந்திரம் பெற்றதாக அறிவிக்கப்படுவதற்கு முன்னரே தமிழ் மக்கள் மத்தியிலும் அரசியலில் ஆர்வம் கொண்ட அறிஞர்கள், புத்திஜீவிகள் தரப்பிலும் ஒலித்தன. இன்றுவரையும் தமிழர்கள் ஒற்றுமைப்படவேண்டுமென்ற குரல் ஒலித்துக் கொண்டுதானிருக்கிறது.

தமிழர்கள் ஒற்றுமைப்படவேண்டிய நேரத்தில் ஒற்றுமைப்பட்டிருந்தால் இன்று தமிழர்கள் தலை நிமிர முடியாத அளவு அவலம் ஏற்பட்டிருக்காது. பேரழிவு ஏற்பட்ட பின்னரும்கூட தமிழ் அரசியல்வாதிகள் மட்டுமல்ல, தமிழ் மக்களின் விடிவுக்காகப் போராட முன்வந்தவர்களாகக் கூறிக்கொண்டவர்களும் காட்டிக் கொண்டவர்களும்கூட பிரிந்து நின்றே ஒற்றுமை பற்றிப் பேசுகிறார்கள்.

அன்றுதொட்டு இன்றுவரை ஒற்றுமைக்குரல் ஒலித்துக்கொண்டேதானிருக்கிறது. ஆனால் ஒற்றுமை தான் ஏற்படுவதாக இல்லை. இருந்த ஒற்றுமைகூட நடந்துமுடிந்த தேர்தலின்போது குலைந்து போனது. 'இந்தச் சனியன் பிடிச்ச தேர்தல் ஏன்தான் வருகிறதோ. இருக்கிற ஒற்றுமையையும் சிரழிச்சுப் போட்டுப் போகுது' என்று அமரர் அமிர்தலிங்கம் ஒருதடவை கூறியது இப்போதும் நினைவில் நிற்கிறது. கடந்த பொதுத் தேர்தலின்போது முன்னைய நாடாளுமன்றத்தில் ஒற்றுமையாக, ஒரே அமைப்பில் நின்று தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தவர்கள் பிளவுபட்டு சிதறிப்போனார்கள்.

இதே சமயம் முப்பது முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இந்த ஒற்றுமைக்குரல் சம்பந்தமாக நடந்த ஒரு சம்பவம். நான் நேரில் கண்டு கேட்டது. வாசக நேயர்களும் அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக இங்கே தருகிறேன்.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் ஆண்டு விழா, யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெற்றது. ஆசிரியர்கள் மண்டபத்தை நிறைத்திருந்தனர். அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களும் இம் மகாநாட்டிற்கு சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். காங்கிரஸ் - தமிழரசு போட்டி அதிகரித்திருந்த காலம் அது. இரு தலைவர்களும் என்ன சொல்லப் போகிறார்கள் என்பதை அறிந்து கொள்வதற்காக இரு தலைவர்களின் ஆதரவாளர்கள் மட்டுமல்ல, கட்சி சார்பற்றவர்களும் மண்டபத்துக்கு வெளியேயும் திரண்டிருந்தனர்.



# ஒற்றுமைப்பட வேண்டிய நேரத்தில் ஒற்றுமைப்பட்டிருந்தால்...!

கோபு



ஆசிரியர் சங்கத்தின் தலைவர் வே. சுப்பையா வாத்தியார் தலைமையுரை நிகழ்த்தினார். ஆசிரியர்களின் பிரச்சினைகளை எடுத்துக்கூறியவர் தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் குறிப்பிட்டார். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு உரிமையுடன் வாழ்வதற்கு தமிழர் எல்லோரும் ஒற்றுமைப்பட வேண்டுமென்றும், கட்சி வேறுபாடுகளால் பிளவுபட்டு நிற்கக்கூடாது என்றும் கூறிய சுப்பையா வாத்தியார், இதற்காக இருபெரும் தலைவர்களும் ஒன்றுசேர வேண்டுமெனக்கூறியபடியே இரு தலைவர்களின் பாதங்களுக்கு முன்பாக நிலத்தில் வீழ்ந்து வணங்கி அழுதபடி வேண்டுகோள் விடுத்தார்.

ஆறடிக்கும் அதிகமான உயரமுடைய சிவந்த மேனியரான சுப்பையா வாத்தியார் நிலத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து 'இருவரும் ஒற்றுமைப்படுங்கள்' என்று கேட்கவும் கூட்டத்தினர் நெகிழ்ந்து போயினர். ஆசிரியர்கள் சிலர் சுப்பையா வாத்தியாரைத் தூக்கி இருத்தி அமைதி கொள்ளும்படி ஆறுதல் கூறினார்கள்.

இதன்பின் தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம் உரையாற்றினார். இருவரையும் ஒன்று சேர்ந்து தமிழ் மக்களுக்காக சேவை செய்யும்படி சங்கத்தலைவர் விடுத்த வேண்டுகோளை குறிப்பிட்ட ஜி. ஜி. தமிழ்க்காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் எப்போதும் சேர்ந்து ஒத்துழைக்கத் தயாராகவே இருக்கிறோம் என்பதை இந்த இடத்தில் உறுதிபட தெரிவிப்பதாகச் சொன்னார். அடுத்து தந்தை என்று அழைக்கப்படும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவர் செல்வநாயகம் பேசினார். சங்கத்தலைவர், சுப்பையா வாத்தியார் விடுத்த 'தலைவர்கள் ஒன்று சேரவேண்டும்' என்ற கோரிக்கை பற்றிக் குறிப்பிட்டார்.

'தலைவர்கள், இன்று பிரிந்திருப்பவர்கள் நாளை ஒன்று சேரலாம். இன்று ஒன்றாக இருப்பவர்கள் நாளை பிரிந்தும் போகலாம். தலைவர்கள் ஒற்றுமைப் படுவதிலோ பிரிந்து போவதிலோ பிரச்சினைகள் இல்லை. மக்கள்தான் ஒற்றுமைப்படவேண்டும். மக்கள் ஒன்றுபட்டார்களாயின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும்' என்று தந்தை செல்வா தமது பேச்சில் குறிப்பிட்டார்.



ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் மக்கள்தான் ஒற்றுமைப்படவேண்டும் என்று தந்தை செல்வா அன்று விடுத்த கோரிக்கை, 1976 ஆம் ஆண்டில் நிறைவேறியது. தமிழர் விடுதலைக்கூட்டணி உதயமானது. வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவராக இருந்த ஞானமூர்த்தி அவர்களும் மற்றும் இருவரும் சேர்ந்து எடுத்த முயற்சியினால் வல்வெட்டித் துறையிலும் திருகோணமலையிலும் நடைபெற்ற கூட்டங்களைத் தொடர்ந்து, வட்டுக்கோட்டையில் நடந்த வரலாற்று சிறப்புமிக்க மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி உருவானது. வரலாற்று பெருமைமிக்க இம்மாநாட்டில் முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. மக்களின் ஒற்றுமையினால் ஏற்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியில் தமிழ்த்தலைவர்களும் ஒன்றுசேர்க்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கில் தமிழீழ அரசை மீண்டும் உருவாக்க வேண்டுமெனக்கோரும் பிரேரணையை நாடாளுமன்றத்தில் கொண்டுவருவதற்கு தந்தை செல்வநாயகம் முன்னறிவித்தல் கொடுத்தார். இப்பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் படாமலேயே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு புதிய பொதுத்தேர்தலுக்கான அறிவிப்பு வெளியானது. வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையிலேயே 1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தேர்தல் விஞ்ஞாபனம் உருவாக்கப்பட்டு, தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தேர்தலில் போட்டியிட்டு தமிழர் தாயகத்தின் மிகப் பெரும்பான்மையான இடங்களைப் பெற்று அமோக வெற்றியீட்டினர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் இந்த வெற்றி, கிழக்கு பாகிஸ்தானில் ஷேக்முஜிபுர் ரஹ்மானின் அவாமிக் கட்சி ஈட்டிய வெற்றியைத் தொடர்ந்து ஏற்பட்ட கிளர்ச்சியின் விளைவாக, இந்தியாவின் இந்திரா தலையிட்டு வங்காளதேசம் உருவானதுபோல் இலங்கை

ஏற்பட்டுவிடுமோ என்று ஜே.ஆர் தலைமையில் அமைந்த ஆட்சியாளர்கள் அஞ்சினர். இதனால் காவல்துறையினரைத் தூண்டிவிட்டு யாழ்ப்பாணத்தில் நடந்த கண்காட்சியில் கலகத்தைத் தொடக்கி நாடுமுழுவதும் இனக்கலகம் பரவ வழிவகுத்து, கூட்டணியின் வெற்றியைத் திசைத்திருப்பி விட்டனர்.

தமிழர் தாயகத்துக்கு வெளியே வாழ்ந்த தமிழ் மக்களுக்கு உயிர் அழிவும், சொத்தழிவும் ஏற்பட்டு அகதிகளாகி கப்பல்களில் தாயகம் திரும்பினர். இந்த இனக்கலகம் பற்றி பாரபட்சமற்ற விசாரணை வேண்டுமென்ற கோரிக்கைக்கு சன்சோனி தலைமையில் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இந்த விசாரணை அறிக்கை இன்னமும் வெளிவரவில்லை. இதன் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியை உடைக்க பலவழிகளிலும் சிலர் முயற்சி செய்தனர். இதே சமயம் 77 தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றச்சொல்லி இளைஞர்கள் வற்புறுத்தினர். இவ்வேளையில் தமிழ் இளைஞர்களுக்கு எதிராக அரசாங்கம் எடுத்த கடும் நடவடிக்கை, இளைஞர்கள் நாட்டைவிட்டு வெளியேறவும், அதேசமயம் சாத்வீகப் போராட்டங்களைக் கைவிடவும் வழிவகுத்தது.

தேர்தல்களில் தொகுதிகளை ஒதுக்கீடு செய்வதில் கூட்டணிக்குள் பிளவு ஏற்பட்டது. இன்று தமிழர்கள் ஒற்றுமைப்பட வேண்டும் என்று கூக்குரலிடுவோர் முன்வரும் ஒற்றுமையைக் குலைத்தார்கள். இன்றும் ஒற்றுமையைச் சிதைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராகக் கடைசியாகத் தெரிவுசெய்யப்பட்டிருந்த ஒருவர் தமக்குத் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தொகுதி ஒதுக்கவில்லை என்பதற்காக கூட்டணிக்கு எதிராக பிரசாரம் செய்தார். இளைஞர்களின் போராட்டத்துக்கு எதிராகவும் பகிரங்க மடல்கள் எழுதி ஊடகங்களில் பிரச்சாரம் செய்தார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் தாமே என்றும், இதனால் இனிமேல் நிர்வாக சபைக் கூட்டங்கள் நடத்த முடியாதென்றும் நீதிமன்றத்தில் தடை உத்தரவு வாங்கி அது செயல்பட முடியாமல் தடுத்தார். இதுமட்டுமன்றி தமிழர் கூட்டணி நிர்வாகிகளுக்கு எதிராகவும் இளைஞர் மன்றங்களுக்கு எதிராகவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாருக்கும் மற்றும் அரச அரசியல் உயர் பீடங்களுக்கும் மடல்கள் எழுதி பகிரங்கமாகப் பிரச்சாரம் செய்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் என்ற நீதிமன்றத்தடை உத்தரவினால் செயல்பட்டவர் கடந்த பொதுத் தேர்தலில் தலைநகரில் தமது மகளைத் தலைமை வேட்பாளராக நிறுத்தியதுடன் மற்றும் தமிழ்த் தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தி தாமும் போட்டியிட்டார். இவரும் ஒற்றுமைப்பட வேண்டும் என்று தமிழர்களுக்கு அழைப்பு விடுத்தார். சந்திரிக்கா அம்மையாருக்கு எழுதிய கடிதங்களை மீண்டும் தேர்தல் காலத்தில் பிரச்சாரத்துக்காக வெளியிட்டார். இதுவே அவருக்கு வினையானது. ஜனநாயகக் காவலர் என்று புகழ்ந்த சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளின் புகழ்ச்சிக்கு சிங்களவர்கள்கூட மதிப்பளிக்கவில்லை.

தந்தை செல்வா வகித்த கூட்டணியின் தலைமைப் பதவியை வைத்தே தந்தையின் பெயரில் வெற்றி ஈட்டலாம், தலைவராகலாம் என்று அவர் கண்ட கனவு பலிக்கவில்லை. தமிழ் மக்கள் எல்லோரையும் ஏமாற்றிவிட முடியாது. இதை தனிப்பெரும் தமிழர் கூட்டணித் தலைவர் இன்று உணர்ந்திருப்பார். எல்லோரும் தலைமைப் பதவியைக் குறிவைத்து ஒற்றுமைக்குரல் எழுப்பினால் பின்பற்றுபவர்கள் யார்?





## விண்கற்களில் நீர்

சூரியனை சுற்றிவரும் பல்வேறு கோள்களிலும் தண்ணீர் இருக்கிறதா என்று ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. சூரியனை சுற்றிவரும் கோள்களைத் தவிர ஏராளமான விண்கற்களும் விண்ணில் சுற்றி வருகின்றன. இவற்றில் பல கற்கள் இராட்சத அளவில் இருக்கின்றன. அதாவது 200 கிலோ மீட்டருக்கு மேல் அகலமாக இருக்கின்றன. அந்த கற்களை அமெரிக்காவில் நாசா விண்வெளி விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றனர். ஹவாய் தீவில் இராட்சத டெலஸ்கோப்பை அமைத்துள்ளனர். அதன்மூலம் இந்த கற்களை ஆய்வு செய்ததில் தண்ணீர் இருப்பது தெரிய வந்தது. உறைந்த நிலையில் மேல் பகுதிகளில் தண்ணீர் இருந்தது. அதனால் அவற்றில் உயிரினங்கள் வாழவும் வாய்ப்பு இருக்கலாம் என கருதப்படுகிறது.



# ராவணன் ஸ்பெஷல்

★தமிழ் ஹிந்தி தெலுங்கு மூன்று மொழிகளிலும் ஒரே நேரம் வெளியாகிறது

★விக்ரம் தமிழில் வீரா என்னும் பாத்திரத்திலும் ஹிந்தியில் தேவ் என்னும் பாத்திரத்திலும் நடித்திருக்கிறார்.

★கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன் படத்திற்குப் பின் ஐஸ்வர்யா நடிக்கும் தமிழ் படம். *ஐந்து வருடங்களாக ஹிட் கிடைக்காமல் விக்ரம் பெரிதும் நம்பியிருக்கும் படம்

★மணிரத்தினம் ஆய்த எழுத்துக்குப் பின் நேரடியாக இயக்கும் தமிழ்ப் படம்.




"ராவணன்" படத்தில் நான் இராவணன் கிடையாது. படத்தில் எனது கேரக்டர் பெயர் வீரா. அப்படியானால் ராவணன் யார்? அது மணிரத்தினத்துக்குத்தான் தெரியும். தமிழில் ஏற்ற வேடத்தை இந்தியில் அபிஷேக் பச்சன் ஏற்றிருக்கிறார். இப்படத்தில் யாருமே கஷ்டமில்லாமல் நடித்திருக்க முடியாது. ஒவ்வொரு காட்சியும் அவ்வளவு கஷ்டம்

## நான் இராவணன் இல்லை விக்ரம்!

ராவண் படப்பிடிப்பில் ஒரு சம்பவம். பசு ஒன்று கன்றை ஈனும் காட்சியை கிராபிக்ஸ் செய்ய முடியாமல் நிஜமான பசு ஒன்று கன்று போடும் காட்சியையே படமாக்க விரும்பினார் மணிரத்னம். மத்திய பிரதேச மாநிலம் ஓச்சா எனும் இடத்தில் படப்பிடிப்புக் குழுவினரோடு ஒரு மாட்டுத் தொழுவத்தில் 10 மணி நேரம் காத்திருந்தாராம். அவருடன் அபிஷேக் பச்சனும் இருந்தாராம். 10 மணி நேரமும் மொத்த யூனிட்டும் மாடு கன்று போடுவதற்காக காத்திருந்தனராம். அன்று மாலை எடுத்த காட்சியை போட்டுப் பார்த்த மணிரத்னம், அந்தக் காட்சி வெகு இயல்பாக வந்ததில் திருப்தியடைந்தாராம். உண்மையிலேயே இது எங்களால் மறக்க முடியாத அனுபவம் என்று ராவணன் யூனிட் தெரிவித்திருக்கிறது.

இதற்குத் தக

அஷ்ரஃப் சிஹாப்தீன்
ashroffshihabdeen@gmail.com



# மொக்கை போடு போடு ராஜா!

**ரொம்பத்தான்** அலட்டிக் கொள்கிறார்கள் இன்றைய இளைஞர்களில் ஒரு குழுவினர்!

இணையத்தில் தளம் உருவாக்கி எழுதிக் கொண்டிருக்கிறார்களாம். பத்திரிகைகளில் எழுதி, வளர்ந்து எழுத்தாளராகிவிட்ட நமது எழுத்தாளர்களைப் போலவே இவர்களும் ஒரு தளத்தை உருவாக்கி விட்டால் எழுத்தாளராகிவிட்டதாக எண்ணிக் கொண்டு திரிகிறார்கள். சில தளங்கள் பரவாயில்லை ரகம். சில தளங்கள் ஏதோ அவரவர் அறிவுக்குட்பட்டவை. சில தளங்கள் பிஞ்சில் பழுத்தவை. சில தளங்கள் பத்திரிகையில் வெளிவரும் துணுக்குத் தோரணங்களுக்கு ஒத்தவை. சில தளங்கள் வாந்தியை வரவைப்பவை. இரண்டொன்றில் அவரவர் படித்த, நன்கு புரிந்துகொண்ட விடயங்களைத் தெரிவிப்பவை. ஒரு சுகமான அல்லது ஆர்வமான அல்லது ஆரோக்கியமான வாசிப்புக்கு உட்பட்டவையாக எவற்றையும் என்னால் அடையாளம் காண முடியவில்லை. எனக்குத் தெரியாமல் இருக்கக்கூடும். தெரிந்தவர்கள் வலைத்தள முகவரி தந்தால், அது நன்றாக இருக்குமெனில், தளத்துக்கு உரியவரையும் அதன் முகவரியைத் தந்தவரையும் வீட்டுக்கு அழைத்து ஒரு பிளேன் ரீ கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

ஒரு வட்டத்துக்குள் நின்று எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ளும் தளங்களே அதிகமாக இருக்கின்றன. சந்தித்ததையும் கைத்தொலைபேசியில் பேசிக் கொண்டதையும் வைத்து குறிப்புப் போடுகிறார்கள். அதற்கு 'மொக்கை போடுவது' என்று பெயராம். மொக்கையாக இருந்தாலும் ரசிக்கத்தக்கதாக இருக்க வேண்டாமா?

ஒரு நூலை வாசித்து அதுபற்றி கருத்துப் பரிமாறிக் கொள்ளுதல், நல்ல கவிதையொன்றை எடுத்துக் காட்டுதல், சுவையான ஒரு சம்பவத்தை எழுதுதல், நாட்டு நடப்புப் பற்றி, சமூக நலன் பற்றி எழுதுதல் போன்ற முயற்சிகளை யாரும் செய்வதாக இல்லை. செய்திப் பத்திரிகைகளில் ஞாயிறு இதழ்களில் வரும் கட்டுரைகளின் சாரமாகப் பலர் சமூக நலன் குறித்து எழுதுவதாக பாவனை பண்ணுவதைப் பார்க்கும் போது வயிற்றைப் புரட்டுகிறது. அரைவேக்காட்டுத் தனமாகச் சிலர் மேதாவிகள் போலச் சொல்லும் கருத்துக்களைப் படிக்கும்போது என்றைக்காவது

அவரைச் சந்திக்காமல் இருந்துவிட வேண்டும் என்று பிரார்த்திக்கத் தோணுகிறது. அண்மையில் ஒருவரின் தளத்தில் அதைப்படிப்பவர்கள் என்று ஒரு பட்டியல் சுழன்றதைப் பார்த்தேன். உலகத்திலுள்ள அனைத்து நாடுகளிலிருந்தும் பலர் அத்தளத்தைப் படித்துக் கொண்டிருப்பதாக ரீல் சுற்றப்படுகிறது. சிவியில் இருப்பவர்கள் எல்லாம்கூட அவரது மொக்கைகளைப் படிக்கிறார்களாம். யாருக்குக் கதை விடுகிறார்?


ஒரு புதிய நண்பரோடு அறிமுகமாகும்போது மின்னஞ்சல் முகவரியைக் கேட்டு விடுகிறார். ஓர் இலக்கிய ஆர்வலரோடு அறிமுகம் கிடைக்கும்போது அவர் நமது தள முகவரியைக் கேட்கிறார். இரண்டும் இல்லாதவன் வாய்ப்பாடு தெரியாத மாணவனைப் போலத் திணறுவதைக் கண்டிருக்கிறேன். அப்படி எதுவும் இல்லை என்று சொல்பவர்களை ஒரு 'பேக்கு' என்பது போலப் பார்க்கிறார்கள். ஆனால் இவற்றையெல்லாம் வைத்துக்கொண்டிருப்பவர்களது தளங்களுக்குப் போனால் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வரும் வாசகர் கடிதங்கள் நல்லவை என்று சொல்லத் தோன்றுகின்றது.

நானும் ஒரு 'பேக்கு' போலக் கொஞ்சக் காலம் திரிந்திருக்கிறேன். இயலாமல் பலரிடம் (அவர்களும் அரைகுறைதான்) தகவல் பெற்று ஒரு தளத்தை ஆரம்பித்தேன். அதை உருவாக்கிக் கொள்ள முயன்று ஒரு கட்டத்தில் மடிக்கணனி செயலிழந்து போனது. 2000 ரூபாய் கொடுத்துச் செய்த பின்னர் ஏழெட்டுப் பக்கங்களை உருவாக்கி முடிந்த பிறகு சில நண்பர்களுக்குத் தகவல் கொடுத்தேன். இரண்டொருவர் பார்த்துவிட்டு முடித்துக்கொண்டார்கள். நான் தளம் உருவாக்கினால் அவர்கள் படித்தேயாக வேண்டும் என்று தலைவிதியா என்ன?

சிறு கதைகள் என்று ஒரு பக்கத்தை உருவாக்கினேன். மூன்று கதைகளைப் போட்ட பிறகு இப்படி கதைகளைத் தளத்திலேயே போட்டுவிட்டால் புத்தகமாக வெளிவரும்போது யாரும் வாங்க மாட்டார்களே என்ற பயம் வந்தது. அந்த மூன்று கதைகளோடு நிறுத்திக் கொண்டேன். வெளியீட்டு விழா அன்று விற்கும் ஐம்பது புத்தகங்களும்கூட விற்காமல் போய் விடும் என்ற பயம் தொற்றிக்கொண்டது எனக்கு.

எனவே வெறும் மொக்கை போடுவதற்கு மாத்திரமே இது சரிவரும் என்று முடிவுக்கு வந்து விட்டேன். ஆனால் மொக்கை போடுவதற்கு எனக்கு விருப்பமில்லை. எனது பெயரில் தேடி, எனது முகவரியைக் கண்டுபிடிப்பதற்கு வாய்ப்பாக இருக்கட்டும் என்று அத்தளத்தை விட்டு வைத்திருக்கிறேன்.

இப்போது இளைய சமூகம் வாசிப்பில் அக்கறை காட்டுவதில்லை. இலத்திரனியல் காட்சி ஊடகங்கள் இரத்தத்தோடு ஒன்றிப் போய்விட்ட நிலையில் தளங்களை உருவாக்கி மொக்கை போட்டு அதையாவது வாசிக்கிறார்களே என்பதுதான் எனக்கிருக்கும் பெரிய சந்தோஷம்...!




# எங்களுக்காய் யார் இருக்கிறார்கள்?

குழந்தைகள் மீண்டும் மீண்டும் ஏன் பிறக்கின்றன
பதற்றங்களை கண்டு அதிரும்
இந்த குழந்தைகளை பார்க்கும் பொழுதெல்லாம்
முகம் கோணலாகி உடைகிறது.
அவர்களின் புன்னகையை பார்ப்பவர்களில்லை,
அவர்களின் வார்த்தைகளை கேட்பவர்களில்லை,
அந்தச் சிறுவன் பணத்திற்காக கழுத்து நெரித்து
கொல்லப்பட்ட நகரத்தில்
அவனின் குருதி படர்ந்த தெருவில்
நான் எப்படி அமைதியாக திரிவது?
அம்மா ! ஏன் என்னை இந்த மண்ணில் பெற்றிருக்கிறாய்?
யாரிடமும் கருணையில்லை
இரத்தமும் வன்மமும் படிந்த முகங்களுடன்
நான் பேசிக்கொண்டிருக்கிறேன்
என்னைச் சுற்றிலும்
மனிதர்களை தின்று களிக்கும் மிருகங்கள் அலைகின்றன
மிருகம் கவர்ந்து சென்ற நண்பனைப்போல
நான் ஏனம்மா இருக்கிறேன்?
கருணைக்காக தவிக்கும் குழந்தைகள்
எனக்கு முன்னால் செல்லுகின்றனர்
பிள்ளைகளுக்காக துடிக்கும் தாய்மார்கள்
என்னோடு பேசுகின்றனர்
அம்மா ஏன் என்னை இந்த மண்ணில் வளர்த்தாய்?
குழந்தைகளை இழுத்துச் செல்பவர்கள் என்னையும்
ஒரு இரவில் துப்பாக்கிகளால்
இழுத்துச் செல்ல முடியும்
உன்னையும் என்னையும் குறித்து யாரும் பேசுவதாயில்லை?
தங்கள் கோப்பைகளை குறித்தும்
தங்கள் வீடுகளைக் குறித்தும்
தங்கள் வண்டிகளைக் குறித்தும் அவர்கள் பேசுகிறார்கள்
அம்மா ஏன் வன்மம் நிறைந்த
மண்ணில் என்னை நடமாட விட்டிருக்கிறாய்?
பூக்களை பார்க்க இன்னும் எதை நாம் இழக்க வேண்டும்?
துப்பாக்கிகளால் இருதயத்தை குத்திக்கொள்ளும் காலம்
ஏன் இன்னும் விரட்டுகிறது?
அமைதியான இரவில் இந்த நகரத் தெருவொன்றில்
நடந்து வர ஆசைப்படுகிறேன்
வெளிச்சங்களில் மகிழ்ச்சியுடன் உலவ விரும்புகிறேன்.
அம்மா அழகான வாழ்வு எப்படியிருக்கும்?
மகிழ்ச்சிக்கான ஏக்கங்கள் கனவாய்ப்போகின்றன.
காலம் எல்லா வகையிலும் பிழைத்துப்போய்க்கிடக்கிறது
நீ இன்னும் வெயிலில் கிடந்து காய்கிறாய்
எங்களுக்காய் யாரம்மா இருக்கிறார்கள்?

தீபச்செல்வன்

விக்ரமாதித்தன்




## அரைத்த மாவில் கலக்கிய மசாலா!

சாமி, வேல், ஆறு ஆகிய படங்களை இயக்கிய ஹரியின் இயக்கத்தில் வெளிவந்துள்ள படம்தான் 'சிங்கம்'. ஒளிப்பதிவு - பிரியன், இசை - தேவி ஸ்ரீபிரசாத், தயாரிப்பு - ஸ்டியோ கிரீன், நடிகர்கள் - சூர்யா, அனுஷ்கா, பிரகாஷ்ராஜ், விவேக், கதை - திரைக்கதை- வசனம்- ஹரி.

கடத்தல், கப்பம் வாங்குதல், கொலை, கொள்ளை போன்ற சமூக விரோத செயல்களை செய்பவர்களை கம்பீரமாக வேட்டையாடி வீழ்த்துபவனே 'சிங்கம்'. சிங்கமாக சூர்யா. இது அவரின் 25 ஆவது படமும்கூட. நல்லூர் என்ற கிராமத்தில் பலசரக்குக் கடை வியாபாரத்தை நடத்த விரும்பும் துரைசிங்கம் (சூர்யா) தன் அப்பாவின் ஆசைக்காக பொலிஸ் வேலையில் சேருகிறார். நேர்மையான பொலிஸ் சப் இன்ஸ்பெக்டரான அவருக்காக, எதையும் செய்யத் தயாராக இருக்கிறது அந்த ஊர்.



ஒரு ரியல் எஸ்டேட் விவகாரத்தில் சென்னை தாதாவான பிரகாஷ்ராஜுடன் சூர்யாவுக்கு பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திடுவதில் பிரச்சினை ஏற்பட பிரகாஷ்ராஜ் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி சப் இன்ஸ்பெக்டர் சூர்யாவை, இன்ஸ்பெக்டர் சூர்யாவாக பதவி உயர்த்தி, தனது திருவான்மியூர் ஏரியாவுக்கே மாற்றல் செய்ய வைக்கிறார். அங்கே இருவருக்குமான மோதல் ஆரம்பிக்கிறது. கடைசியில் வில்லனின் கோட்டைக்குள் இருந்தவாறே ஹீரோ எப்படி வில்லனை முடிக்கிறார் என்பதுதான் கிளைமாக்ஸ்.

சூர்யா மீண்டும் 'காக்க காக்க' படத்திற்கு பிறகு பொலிஸ் வேடத்தில் கடமை தவறாத பொலிஸ் அதிகாரியாக முரட்டு மீசை, உருட்டு விழியுடன் கம்பீரமாக இருக்கிறார். கோபப்படுகிறார், ஆக்ரோஷமாய் சண்டையிடுகிறார், காதலிக்கிறார், துடிக்க துடிக்க மிடுக்காய் நடக்கிறார். பொலிஸ் கதாபாத்திரம் இவருக்கு நன்றாகவே பொருந்துகின்றது. ஆங்காங்கே வரும் காதல் காட்சிகளில் அட்டகாசமாக நடித்திருக்கும் இவர், பஞ்ச் வசனம் பேசும் போதுதான் கத்தி காதைக் கிழிக்கிறார். துரைசிங்கம் என்று இவருக்கு வைத்த பெயர்கூட ஏதோ பொருத்தமாய் இருப்பதாய்த் தெரியவில்லை.

இயக்குனர் ஹரி தனது மசாலா கலவையிலிருந்து சிறிதும் அச்சுப்பிறழாமல் எடுத்திருப்பதுபோல் தெரிகிறது. கிட்டத்தட்ட அனைத்துக் காட்சிகளுமே ஏதோவொரு ஹரி படத்தில் பார்த்தது போல்தான் இருக்கிறது. ஆரம்பக் காட்சி 'ஐயா'வில் தொடங்கி, இறுதிக் காட்சி 'ஆறு', 'சாமி' வரை பார்த்த ஞாபகம்தான். செம்பட்டை வில்லன்கள், வீர வசனங்கள், புஜங்கள், முறுக்கேறும் நரம்புகள், ஆக்ஷன், கொமடி, பனை அடி உயரத்தில் பறக்கும் ஜீப்புகள், குத்துப்பாட்டு,

நடுவில் குடும்பம், சென்டிமென்ட் என்று வழக்கம் போல் எல்லா மசாலாவும் இதிலும் இருக்கிறது. தகவல்கள் சேர்த்து சேர்த்து வசனங்களை அமைத் திருப்பதால் ஹரி நிறைய இடங்களில் கைத்தட்டல் பெறுகின்றார். வீரம் சொட்டச் சொட்ட திரைக்கதை அமைக்கும் பாணி, அதில் வில்லனை பந்தாட ஹீரோ எடுக்கும் புத்திசாலித்தனமான யுக்திகள். எல்லாமே மிகச் சரியாக திட்டமிட்டு செய்திருக்கிறார் இயக்குனர். நிச்சயம் படத்தின் வெற்றிக்கு ஒரே காரணம் ஹரி மட்டும்தான்.

நீண்ட நாளைக்குப் பிறகு ஒரு ஆக்ஷன் மசாலா படத்தில் ஹீரோயினை முழுப் படத்திலும் ஓரளவு ஸ்கோப் உள்ள பாத்திரத்தில் காட்டியிருக்கிறார்கள். அனுஷ்காவும் உணர்ந்து நடித்திருக்கிறார். விரட்டி விரட்டி காதலிக்கிறார். டூயட் பாடுகிறார். நல்ல வேளையாக கதையின் பல இடங்களை அவரை வைத்தே இயக்குனர் நகர்த்துகிறார். அதனால் படம் முழுக்க வருகிறார். கவர்ச்சியையும் அளவாக அள்ளி வழங்கியிருக்கிறார். நடனக் காட்சிகள் சூப்பர். இயக்குனர் மற்றும் கெமராமேனுக்கு, ஹீரோயினுக் கும் ஹீரோவுக்கும் உயரத்தை சமாளிப்பதற்கே நேரம் சரியாக இருந்திருக்கும்போல..! இதற்காகவே க்ளோஸ் அப் காட்சிகளையும் தவிர்த்திருக்கிறார்கள் என்பது அப்பட்டமாகத் தெரிகிறது. ரொமான்ஸ் காட்சிகளில்கூட சில அடி எட்டவே நிற்கிறார் ஹீரோ.

வில்லனாக பிரகாஷ்ராஜ் கலக்கி எடுக்கிறார். பேசவேண்டிய இடங்களில் பேசி பயங்கரத்தைக் காட்டுகிறார். படம் தொய்வில்லாமல் செல்வதற்கு இவரும் ஒரு முக்கிய காரணம். அவரது ட்ரேட் மார்க்கான 'டேய்... டேய்'ஐ இங்கும் கைவிட வில்லை.

ஏட்டு எரிமலையாக விவேக், கொஞ்சமேனும் சிரிக்க வைத்திருக்கிறார். இவரின் கொமடி பல இடங்களில் சிலிர்க்க வைக்கிறது. அனுஷ்காவிடம் காசு வாங்கி போன் நம்பர் கொடுக்கும் சீனிலும், கடத்தல் லொறியைப் பிடிக்க வரும் சீனிலும் நகைச் சுவையை ரசிக்க முடிகிறது. இவரது இரட்டை அர்த்த வசனங்களை நிறுத்திக்கொண்டால் நல்லது எனத் தோன்றுகிறது.

ராதாரவி, நாசர், 'நிழல்கள்' ரவி, மனோரமா, விஜயகுமார் என ஒரு பெரிய ஜாம்பவான்கள் கூட்டமே நடித்திருந்தாலும் யாருக்கும் பெரிய ஸ்கோப் இல்லை. ஆனால் அவர் களுக்கென கொடுக்கப்பட்டிருந்த கரெக்டர்களை சரியாக செய்து முடித்திருக்கிறார்கள்.



பிரியனின் ஒளிப்பதிவு திருப்தியாகவிருக்கிறது. தேவிஸ்ரீபிரசாத்தின் இசை யில் இரண்டு பாடல்கள் பரவாயில்லை. ஆனால் பின்னணி இசையில்தான் சொதப்பிவிட்டிருக்கிறார். வி.டி. விஜயனின் எடிட்டிங் ஆங்காங்கே தாவி, படத்தை ஓரளவுக்கு தூக்கி நிறுத்து கின்றது.

இரண்டு மணி நேரம், முப்பத்தைந்து நிமிடங் களை விறுவிறுப்பாக நகர்த்தவேண்டும் என்ற முனைப்பில் ஹரி உழைத்திருப்பது தெரிகிறது. ஆனால் தனது முன்னைய படக்காட்சிகளையே கொப் பியடித்திருப்பது, மாறாத லொக்கேஷன்கள், ரிப்பீட் வசனங்கள் என சலிப்புத் தட்ட வைக்கிறார். மசாலா படங்களுக்கே உரிய பிரச்சினையான நீண்ட மற்றும் வசனங்களால் ஆன கிளைமாக்ஸ் படத்தின் வேகத்தை பாதிக்கிறது. தூத்துக்குடியில் பிரகாஷ்ராஜ் பிரச்சினை பண்ணும் போது ஊரே திரண்டு வந்து சூர்யாவுக்கு சப்போர்ட் செய்வது, திகதி முடிவடைந்த பாஸ் போர்ட்டை வைத்து ஒரு நல்ல கொமடி, காதல் காட்சிகள், வேலையை விட்டு சூர்யா செல்லலாம் என நினைக்கும்போது அனுஷ்காவின் வசனம் என பல காட்சிகள் ரசிக்கும்படி உள்ளன.

சில திருப்பங்களை எளிதாக கணிக்க முடிந்தாலும், லொஜிக் உதைத்தாலும் பார்க்கும்போது பெரிய குறை ஏதும் இருப்பதாய்த் தெரியவில்லை. தன்னை மீண்டும் அற்புதமான ஒரு கொமர்ஷியல் டைரக்டராக ஹரி நிரூபித்திருக்கிறார். படத்தின் முடிவில் 'சிங்கத்தின் வேட்டை தொடரும்...' என டைட்டில் போடப் பட்டிருப்பதால் சிலவேளை 'சிங்கம் - 2' எடுக்கும் ஐடியா வேறு இருக்கிறதோ தெரியவில்லை. ஏற் கனவே பல படங்களில் பார்த்த கதைதான் என் றாலும் படபடவென வெடிக்கிறது சிங்கம். சூர்யாவின் இந்த 25 - வது படம் அவரது சில ரசிகர்களை திருப்திப்படுத்தாவிட்டாலும், அவருக்கு மேலும் சில ரசிகர்களை உரு வாக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆகமொத்தத்தில் சிங்கம் - சீற்றம்





செவே.விவேகானந்தன்

சட்டத்தரணி

# சட்டம் பேசுகிறது

**வாசகர்களே! சட்டப் பிரச்சினைகளில் சிக்கி அவதியுறுகிறீர்களா? அவற்றுக்குத் தீர்வுகாண முடியவில்லையா? கவலையை விடுங்கள். 'சட்டம் பேசுகிறது' என்னும் இப்பகுதிக்கு உங்கள் சட்டப் பிரச்சனைகளை எழுதி அனுப்புங்கள். அனுபவமிக்க சட்டத்தரணிகள் பதிலளிப்பார்கள்.**

**கேள்வி:** ஜனாதிபதி பதவிக்கு, மக்களால் இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர் மீண்டும் மூன்றாம் முறை அத்தகைய பதவிக்கு மக்களால் தேர்ந்தெடுக்க முடியாது என அரசியலமைப்பு கூறுவதாக செய்திகள் கூறுகின்றன. அவ்வாறாயின் மூன்றாம் முறை எவ்வாறு சாத்தியமாகும். இது பற்றி சட்டம் என்ன கூறுகின்றது?

**வே. கணேஸ்வரன், திருகோணமலை**

**பதில்:** அரசியலமைப்பின் உறுப்புரை 30(2) அவ்வாறுதான் எடுத்துரைக்கின்றது. இரு முறை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி ஒருவர், மீண்டும் ஜனாதிபதி பதவிக்கு மக்களால் தேர்ந்தெடுக்க தகுதி உடையவர் அல்லர் என்று அவ்வுறுப்புரை திட்டவட்டமாகக் கூறுகின்றது.

உதாரணமாக ஒருவர் மக்களால் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றார். ஜனாதிபதி பதவியை ஏற்ற ஒரு மாதத்திற்குள் இறந்து விடுகின்றார். உடனடியாக பிரதமர் தற்காலிக ஜனாதிபதியாக நியமிக்கப்படுவார். அதன் பின் பாராளுமன்றம் ஜனாதிபதியை தேர்ந்தெடுக்க வேண்டும். பிரதமரை பாராளுமன்றம் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கலாம். அல்லது வேறு பாராளுமன்ற உறுப்பினரை ஜனாதிபதியாக தெரிவு செய்யலாம். அவ்வாறு பாராளுமன்றத்தால் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படுபவர், மக்களால் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்று கூற முடியாது. அவ்வாறு பாராளுமன்றத்தால் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கபட்டவரை, அதன்பின் மக்களால் இரு முறை தேர்ந்தெடுக்க முடியும். ஆகவே அவர் ஏறக்குறைய 18 வருடங்களுக்கு தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருக்க முடியும்.

அரசியலமைப்பின் பிரகாரம் இரு முறைக்கு மேலாக ஒருவர் மக்களால் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்க முடியாது. மூன்றாவது முறையாகவோ அல்லது அதற்கு மேலாகவோ ஜனாதிபதியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றால் அரசியலமைப்பின் உறுப்புரை 30 (2) க்கு திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும். அரசியலமைப்பின் 30 (2) உறுப்புரை எவ்வாறு திருத்த முடியுமென்பதை உறுப்புரை 83 (ஆ) விபரிக்கின்றது.

83(ஆ) உறுப்புரை விபரிக்கப்பட்டவாறுதான் அவ்வகையான திருத்தம், நீக்கம், மாற்றம், அத்துடன்





சேர்ப்பு ஆகியவற்றை செய்யமுடியும். இவ்வாறு செய்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் மூன்றில் இரண்டு (2/3) வீதத்திற்கு குறையாதோர் சாதகமாக வாக்களிக்க வேண்டும். மூன்றில் இரண்டு பெரும் பான்மை என்பது பாராளுமன்றத்தின் மொத்த உறுப் பினர்களான 225 உறுப்பினர்களில் மூன்றில் இரண் டாகும். ஆகவே வாக்களிப்பில் சமூகமளிக்காதோரும் உட்படுத்தப்படுவர். ஆகவே ஆகக் குறைந்தது 150 பாராளுமன்ற உறுப்பினர்களாவது சாதகமாக வாக்களிக்க வேண்டும். மூன்றில் இரண்டு பெரும் பான்மை வாக்குகளைப் பெற்றாலும் அரசியலமைப் பின் 30 (2) உறுப்புரையை திருத்தவோ மாற்றவோ முடியாது. அவ்வாறு திருத்துவதற்கும் மாற்றுவதற்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மக்கள் தீர்ப்பும் (REFERANDUM) பெற வேண்டும்.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் சிங்கள மக்கள், மக்கள் தீர்ப்பில் ஜனாதிபதிக்கு சாதகமாக வாக் களிப்பர். அது முடிந்த முடிவு. ஆனால் மக்கள் தீர்ப்பின் முடிவை எதிர்த்து உயர் நீதிமன்றத்திற்குச் செல்லலாம். மக்கள் தீர்ப்பை ரத்துச்செய்யுமாறு உயர் நீதிமன்றத் திற்கு விண்ணப்பம் கொடுக்கலாம். அரசியல்வாதிகள் நினைப்பதுபோல் இலகுவான நடைமுறைச்சாத்தியம் கொண்டதல்ல.

**கேள்வி:** எனது மகன் ஒரு சிறிய பலசரக்குக்கடை நடத்துகின்றார். எனது மகனுடன் பொறாமை கொண்ட யாரோ ஒருவர் ஆயிரம் ரூபா கள்ள நோட்டொன்றைக் கொடுத்து சாமான் வாங்கிச் சென்றிருக்கிறார். காலை 9 மணிக்கு பொலிசார் வந்தனர். கடையில் கள்ள நோட்டு இருக்கின்றது என்று கூறி கடையிலிருந்த பணத்தையும் எடுத்துக்கொண்டு மகனையும் கூட்டிச் சென்றனர். கடையிலிருந்த பணத்தில் ஒரு ஆயிரம் ரூபா நோட்டு, கள்ள நோட்டு என்று கூறி மகனை நீதிமன்றத்திற்குக் கூட்டிச் சென்றனர். மகனை இரண்டு கிழமைக்கு காவலில் வைக்கும்படி நீதிபதி உத்தரவு கொடுத்துவிட்டார். மகன் வெலிக்கடை சிறைச்சாலையில் இருக்கின்றார். மகனை எவ்வாறு வெளியில் எடுப்பது. மகனுக்கு எதிரான வழக்கு என்ன நடக்கும்?


**க. அமரசிங்கம், ஹட்டன்**

**பதில்:** உங்களது மகன் பலசரக்குக்கடை நடத்துபவர். அங்கு பலர் சாமான்கள் வாங்குவார்கள். பணம் தருவார்கள். அவ்வாறு வியாபாரம் நடைபெற்ற வேளையில் ஒருவர் ஆயிரம் ரூபா கொடுத்து உங்கள் மகனிடம் பொருட்கள் வாங்கியுள்ளார். உங்கள் மகனிற்கு ஆயிரம் கொடுத்தவரை தெரியவில்லை. உங்கள் மகனிடமிருந்து எடுத்த பணத்திலிருந்து ஒரேயொரு ஆயிரம் ரூபாதான் சட்டப்படி அமையாத ரூபாய்த் தாளாக இருந்தது. அதுவும் பொலிசார் அறிவிக்கும் வரையும் அவருக்கு ஒரு ஆயிரம் ரூபாய்தான் சட்டத்திற்கமையாத தாளாக இருப் பதனை அறியார். அவர் இந்த ரூபாய்த்தாளை அச்சிட்ட வருமல்லர். அதனால் உங்களது மகன் குற்றம் எதனையும் செய்யவில்லை. எவ்வாறு ஆயிரம் ரூபாய் அவரது கைவசம் கிடைக்கப்பெற்றதென்பதை அவரால் விளங்கப்படுத்த முடியும். வழக்கமாக இவ்வாறான ரூபாய்த் தாள்களை வியாபார நடவடிக்கைகளின்பொழுது பெற்றுவருபவர் என்ற குற்றச்சாட்டுமில்லை. இவ்வாறான வேறு பல சாதக மான விடயங்கள் உங்கள் மகன் பக்கம் இருக்கின்றன. பிணையும் கிடைக்கும். வழக்கிலும் வெற்றி பெறு வீர்கள். தகுதிவாய்ந்த சட்டத்தரணியை அணுக வேண்டும்.

நீங்கள் ஒரு தகுதிவாய்ந்த சட்டத்தரணியை உங்களது மகனின் வழக்கை நடத்துவதற்கு நியமியுங் கள். கவலையை விட்டொழியுங்கள். உங்கள் மகன் குற்றம் ஒன்றும் புரியாதவர். அவர் பிணையில் வருவார். வழக்கிலிருந்து விடுதலை பெறுவார்.

ஓடிப்போகும் நேரத்தில் பணம் தேடிக்கொள் வோம் என்ற கொள்கையுடையோர் எல்லாவகை தொழில்களிலும் இருக்கின்றார்கள். அதனால்தான் தகுதிவாய்ந்த சட்டத்தரணியை அணுகும் வண்ணம் கேட்டுக் கொண்டேன். நேர்மையாகவும் உங்களது மகனின் உரிமைகளை நன்றாகப் பேணக்கூடியவரு மான ஒரு சட்டத்தரணியை நீங்கள் நாடவேண்டும்.

**கேள்வி:** எனது தம்பிக்கு வயது 22. சென்ற ஆண்டு ஜூன் மாதம் வீதியோரத்தில் போடப்பட்டிருந்த பொலிஸ் பரிசோதனை நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். ஏறக்குறைய ஒரு வருடமாக



வெலிக்கடைச் சிறைச்சாலையில் காவலில் வைக்கப் பட்டுள்ளார். பொலிஸ் பரிசோதனை நிலையத்தில் அவர் தனது தேசிய அடையாள அட்டை, வேலை செய்யுமிடத்தில் கொடுக்கப்பட்ட தொழில் அனுமதிப் பத்திரம், கார் ஓட்டும் அனுமதிப்பத்திரம் இவைகள் யாவற்றையும் காட்டியுள்ளார். பொலிசார், பொலிஸ் பதிவு கைவசம் இருக்கவில்லையென்று கூறினர். அதன் பிரகாரம் கைது செய்கின்றோம் என்று கூறி கைது செய்தனர். மேற்கூறியவற்றை நீதிமன்றத்திற்கு கொடுத்த அறிக்கையில் விபரிக்கப்பட்டு, பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டதற்கு ஐயமிருக்கிறது என்று நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டது. நீதிபதி விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவு கொடுத்தார். தம்பியை வெளியில் எடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என ஆலோசனை தருவீர்களா?

**க.விக்னேஸ்வரன் வத்தளை**

**பதில்:** நீங்கள் கூறுகின்ற நிகழ்வுகள் முழுமையான வையாக இல்லை. உங்கள் தம்பியை கைது செய்யும் பொழுது நீங்கள் தம்பியுடன் நின்றீர்களா? நீதிமன்றத் திற்கு கொடுக்கப்பட்ட பொலிஸ் அறிக்கையை நீங்கள் வாசித்துப் பார்த்தீர்களா? நேரடியாக நீங்கள் கண்டதை, கேட்டதை, வாசித்து அறிந்ததைக் கூறுகின் றீர்களா? அல்லது கேள்வி ஞானத்தில் கூறுகின்றீர் களா?

நீங்கள் கூறுவது சரியாக இருந்தால் தமிழர் ஒருவர் பொலிஸ் பதிவை கைவசம் கொண்டுதிரியாவிட் டால், வைத்திருக்காவிட்டால் பயங்கரவாதி யென்றோ அல்லது அவ்வாறு ஐயப்படுவதென்றோ ஒருவரை கைது செய்ய முடியாது. அவ்வாறு கைது செய்தால் கைது செய்யப்பட்டவரின் அடிப்படை உரிமைகள் பல மீறப்படுகின்றன. ஒருவித குற்ற மூமின்றி கைது செய்யப்படுகின்றார். பொலிஸ் பதிவு கைவசம் வைத்திருக்காமை ஒரு குற்றமல்ல. நீங்கள் ஒரு சட்டத்தரணி மூலம் உங்களது தம்பியின் வழக்கை நடத்தியதாகக் கூறவில்லை. ஏன் இவ்வளவு காலமும் ஒரு சட்டத்தரணியை நியமிக்கவில்லை? பொலிஸ் பதிவு கைவசம் வைத்திருக்காமைக்கு விளக்க மறியலில் உங்கள் தம்பியை வைத்திருக்காமல் இருக்க லாம். வேறு குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றம் விளக்கமறியலிற்கு கட்டளையிட்டிருக்கலரம். அவசர கால சட்ட நியதிகளுக்கு கீழும், பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு கீழும் சிலவகையான குற்றச்சாட்டின் பேரில் தகுதிவாய்ந்த அதிகாரிகள் உங்கள் தம்பியை காவலில் வைக்கும்படி கட்டளை பிறப்பித்திருக்க லாம். அல்லது நீங்கள் கூறுகின்ற வண்ணமும் நடந்திருக்கலாம். எதற்கும் தகுதிவாய்ந்த சட்டத்தரணி யிடம் இவ்வழக்கை ஒப்படையுங்கள். அவரிடம் உங்களது குறை நிறைகளைக் கூறுங்கள். அவர் உங்களுக்கு தகுந்த நிவாரணங்களைப் பெற்றுத் தருவார்.




## பிடித்த வீடியோவை Animated GIF ஆக மாற்ற

GIF இமேஜ்களைப் பற்றி நாம் அறிந்திருப்போம். நமக்குப் பிடித்த வீடியோ கோப்புகளை GIF இமேஜ்களாக மாற்றி வைத்துக்கொள்ள உதவும் மென்பொருள் பற்றி பார்ப்போம்.

இதற்கு MovieToAniGIF என்ற மென் பொருள் உதவுகிறது. இந்த மென்பொருளை நிறுவிய பின் "File " -> "Open" மூலம் உங்களுக்குப் பிடித்த வீடியோவைத் திறந்து கொள்ளுங்கள்.

பின் கீழே உள்ள {, } மற்றும் Track Bar உதவியுடன் ஆரம்பம் மற்றும் முடிவுப் பகுதிகளை தேர்வுசெய்து, பின் "Export" -> "Export to animated GIF..." மூலம் GIF படமாக உருவாக்கிக் கொள்ளலாம்.

இந்த Soft பொருளை தரவிறக்க இங்கு செல்லவும். http://evanolds.com/ movtogifsimple.html

அன்பழகன்

# மெய்யான ஆற்றல் எது?

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் எட்டுப் பாடங்களிலும் விசேட திறமைச் சித்திகளைப் பெற்ற ஒரு மாணவன் உயர்தரப் பரீட்சையில் ஒரு பாடத்திலேனும் சித்தியடையவில்லை. பிள்ளையின் மனதிலே விரக்தி. பெற்றோருக்கு விசனம். என்ன நடந்தது?

இந்தக் கேள்விக்கு விடை காண வேண்டுமாயின் இன்னும் சில கேள்விகளுக்குப் பதில் காண வேண்டும். பட்டப் படிப்புக்கு வாசலாக இருக்கும் உயர்தர வகுப்பில் 3 பிரதான பாடங்களை மட்டும் ஒரு மாணவன் படிக்கப் போகின்றான். இதுதான் அவனுடைய வாழ்வின் அடித்தளம். இந்த அடித்தளம் போடப்படும் நிலம், நெகிழ்ந்த நிலையில் இருக்கின்றது. அதாவது கட்டிளமைப் பருவம். வளர்ந்தும் வளராத முதிர்ந்தும் முதிராத பருவம். உணர்ச்சிகள் அலைபாய்ந்து கொண்டிருக்கும் காலம். மாணவனுடைய திறன் எது என்று கண்டுபிடிப்பது மிகவும் கடினமான ஒரு விடயம்.


அனைத்துப் பாடங்களிலுமே திறமைச் சித்தி பெற்ற ஒரு பிள்ளையின் மெய்யான ஆற்றல் எது என்று கண்டுபிடிப்பது எளிதன்று. அதற்கு பொறுமை, நிதானம், திறந்த மனப்பான்மை ஆகியன அவசியம். பெற்றோரும் ஆசிரியரும் பிள்ளையைக்குறித்து வைத்திருக்கின்ற திட்டமும் எதிர்பார்ப்பும் பிள்ளையினுடைய ஆற்றலுக்கும் ஆர்வத்துக்கும் முரணானதாகவும் இருக்கலாம். இந்த முரண்நிலை ஒரு மந்த நிலையை உருவாக்கும்.

இந்த நிலைக்குக் காரணம் என்ன? நோக்கமற்ற கல்வி ஒரு காரணம். பெரும்பாலான பெற்றோருடைய எதிர்பார்ப்பு, தமது பிள்ளைகள் அனைத்துப் பாடங்களிலும் திறமைச்சித்தி அடைய வேண்டும் என்பதுதான். சில பாடங்களில் பிள்ளைகள் கூடிய எண்கள் பெறாவிட்டால் அந்தப் பாடங்களில் விசேஷ கவனம் செலுத்தி அந்தப் பாடங்களிலும் எப்படியாவது திறமைச் சித்தியடைய வைக்க பகீரதப் பிரயத்தனம் எடுக்கின்றனர். சில ஆசிரியர்கள் தங்களிடம் ரியூஷனுக்கு வரும் மாணவருக்கு அதிக புள்ளிகளைக் கொடுத்து உண்மைக்குப் புறம்பானதும் பிள்ளையின் எதிர்காலத்துக்குப் பாதகமானதுமான ஒரு நிலையை உருவாக்குகின்றனர். கல்வியின் மெய்யான நோக்கத்தை அறிய மனதில்லாமல் இருக்கும் இவர்கள் பிள்ளையின் எதிர்காலத்தோடு விளையாடுகிறார்கள்.

எந்தத் துறையில் பிள்ளைக்கு இயல்பான ஆற்றல் இருக்கின்றது? எந்தத் துறையில் பிள்ளைக்கு இயல்பான ஆர்வம் இருக்கின்றது? என்பதை கண்டு கொள்வதுதான் கல்வியின் பிரதான நோக்கம். தமக்கு மனப்பாடமாகத் தெரிந்த எல்லாவற்றையும் பிள்ளையின் மனதுக்குள் திணிப்பதல்ல கல்வி. தனது சுய

புத்தியினாலும் ஆர்வத்தினாலும் உந்தப்பட்டு எந்தப் பாடத்தில் அவன் ஏனைய பாடங்களைவிட அதிக ஆற்றலை வெளிப்படுத்துகிறானோ அந்தத் துறையில்தான் அவனுக்கு இயல்பான ஆற்றல் இருக்கின்றது என்பது கண்கூடு. ஆனால் அனைத்துப் பாடங்களையும் கற்பதற்குரிய வாய்ப்புகள் இருக்க வேண்டும்.

எமது நாட்டின் கல்வி முறை சரியில்லை என்று குறைகூறிக் கொண்டிருப்பதில் எவ்வித பயனும் இல்லை. 11 வருடக் கல்வியின் இறுதியில் மாணவனுடைய மெய்யான ஆற்றல் எது என்று தீர்மானிப்பது 3 மணிநேர வினாத்தாளா? அல்லது பெற்றோரும் ஆசிரியரும் மாணவனுடைய அடைவுகளை ஆராய்ந்து அவனுடன் கலந்தாலோசித்து எடுக்கும் தீர்மானமா? தற்செயலாக பரீட்சை நாட்களில் பிள்ளை நோய்வாய்ப்பட்டு அல்லது மன உளைச்சலுக்கு உட்பட்டு இருந்தால் பெறுபேறுகள் சுட்டும் தரக்குறிகள் என்ன? பெற்றோரும் ஆசிரியரும் இந்த 11 வருட காலத்தில் இந்த மாணவனிடம் கண்டுகொண்டவை யாவை? பிள்ளையினுடைய அந்தத் திறமைகளைக் கண்டுகொள்வதற்கு பாடசாலை எடுத்த முயற்சிகள் என்ன? இந்த அவதானங்களின் அடிப்படையிலும் பிள்ளையின் ஆர்வத்தின் அடிப்படையிலும் எடுக்கப்படும் தீர்மானங்கள் வெற்றியை மட்டுமே தரும் என்பதில் சந்தேகம் உண்டா?






G.P. வேதநாயகம்

என்ன செய்தாலும் சில தொத்து வியாதியள வராமல் தடுக்கேலாது. எல்லாருக்கும் ஒரு வயசில வாற மாதிரி வெளிநாட்டு விசர் ஒண்டு தொத்தீற்றுது என்ர செல்ல மகளுக்கும்.

திருகோணமலையில இருந்து கொழும்புக்குப் போய் பாஸ்போட்டையும் எடுத்து, விக்கினமில்லாமல் வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கக்கூடிய ஏஜன்ஸிகாரன் ஆரையும் கையோட கண்டு அழுது போட்டு வருவமெண்டு பயணத்துக்கு அடுக்குப் பண்ணினம்.

கொழும்பில அறிஞ்சவை தெரிஞ்சவை வீட்டில போய்த் தங்கி மினக்கெடுறதெண்டது இந்தக் காலத்தில ரெண்டு பக்கத்தாருக்கும் பிரச்சினை. ஒரு நாள் வேலைக்காக பதிவு கிகிவெண்டு பொலிஸ் ஸ்ரேசன் வழிய போய்த் தொங்கிக் கொண்டு நிண்டு இழுபடுறதும் உசிதப்படாது. போனமா வந்தமா எண்டு வேலையை முடிச்சுக்கொண்டு போன சுறுக்கில மூச்சுக்காட்டாமல் திரும்பி வாறதுதான் புத்தி. அதுக்கு ராக்கோச்சிதான் தோது.

என்ஜினோட தொடுத்து ரெண்டாம் வகுப்புப் பெட்டி ரெண்டு. அதுக்கங்கால மூண்டாம் வகுப்புப் பெட்டியள மறைச்சாப்போல Buflett எண்டுற சாப்பாட்டுப் பெட்டியோட றெயின் வந்து நிண்டுது. அடிச்சுப்பிடிச்சு அள்ளுப்பட்டு தெரிஞ்ச சேக்கஸ் எல்லாம் காட்டி ஒரு மாதிரி கோணர்சீற் பிடிச்சு குதூகலப்பட றெயினும் வெளிக்கிட்டுது.

றெயில்ல, பஸ்ஸில எண்டு பயணம் போகேக்கதான் மனிசி என்னோட மனம் விட்டுப் பேசிறவ. மனம் விட்டெண்டால், சொந்தக்காறரின்ர சோகக் கதையளையும் பக்கத்து வீட்டாக்களின்ர பரிசு கேடுகளையும் வண்ணமா, வடிவா, விளப்பமா அவிட்டு விடுறதுதான்.

பன்னிரண்டு மணிதாண்ட, மனிசியும் விடுப்புக் கதை பறைஞ்சு வாயுளைஞ்சு கண்ணை மூடத்துவங்கீற்றா. சாடையாக் கண்ணை மூடிச் சாய்வம் எண்டு நானும் நினைக்க, திடுதிடெண்டு உள்ளிட்டாங்கள் அஞ்சாறு விறுமத் தடியன்கள். ஆமி, பொலிஸ்காரரை அடிக்கடி பாக்கிற பாக்கியம் பெற்ற எங்கிட ஆக்களுக்கு அவயளின்ர அங்கங்களப்பற்றிச் சாங்கோ பாங்கமாச் சொல்லத் தேவையில்லை. வந்தவங்கிட கையில வாளுகளும், பொல்லுகளும். என்ஜின் பக்கமா அணைஞ்சிருந்த சீட்டில இருந்து பாத்துக் கொண்டிருந்த எனக்கு என்ன நடக்குது, ஏது நடக்குதெண்டு முதலில ஒண்டுமா விளங்கேல்லை. விளங்கினாப்பிறகு மூளை வேலை செய்ய மாட்டனெண்டு strike பண்ணீற்றுது.

பெரும்பாலும் என்னைப்போல warrent இல பயணஞ் செய்யிற, மற்றவையவிட கொஞ்சம் வசதியான மிடில் கிளாஸ் ஆக்கள்தானே செக்கண்ட் கிளாஸில போறவை. பொதுவாக அவயள் மற்றவயளோட அடிதடிக்கெண்டு இறங்காத சாதுவான அப்பிராணி ஆக்கள். எங்கிட நடப்பும் நாட்டாமையும் வழமையா வீட்டுக்க தானே. அதமிஞ்சிப் போனால் 'அரை'யப் போட்டிட்டு அடுத்த வளவுக்காரனோட வாயால சண்டித்தனம் பண்ணிறதோட சரி.

கேட்டு கேள்வியில்லாமல் முறையா எல்லாம் நடக்குது. ஏதோ தந்து வச்சதை திருப்பி வாங்குமாப்போல உரிமையோட நகை நட்டுகளை உருவிக்கழட்டி அடுக்கிறான்கள். நடக்கிறதெல்லாம் கனவா நினைவா எண்டு விளங்காமல் நித்திரை மயக்கத்தில கிடந்த சனமெல்லாம், கோழிக்குஞ்சுகளை பருந்திட்ட இறாஞ் சக்குடுத்த தாய்க்கோழியளப்போல மலாரடிச்சுப்போய் மசுங்கிக் கொண்டிருக்கினம்.

பிச்சைக்காரனுக்கு அம்பது சதம் குடக்கிறதெண்டாலும் அறுவது தரம் யோசிச்சு மூளையப் பிணையிற ஈயாப்பிசிணியளான எங்களுக்கு உது தேவைதான். எண்டாலும் 83 இல தொட்டு, முறைக்கு முறை விரும்பியோ விரும்பாமலோ குடுத்துச்சிவந்த கை எங்கிட கை எண்டதால கர்ணன்ர பரம்பரேல வந்த எங்களுக்கு இதொண்டும் புதுசில்லைத்தானே? காசைக்குடுக்க கஞ்சப்பட்டினமோ, என்னவோ ஒண்டு ரெண்டு பேருக்கு முறையா சாத்துப்படியும் நடந்துது. பாத்துக் கொண்டிருந்த எனக்கு வயித்தைக் கலக்குமாப்போல கிடக்கு. எழும்பி Toilet க்குப் போவமெண்டாலும் நடக்காது. நாசமறுப்பான்கள் நாலுபேர் நட்டுவக்காலியளப் போல நடுவழியில எல்லே மறிச்சுக்கொண்டு நிக்கிறான்கள். கொஞ்சம் அசங்கினாலும் கையில வச்சிருக்கிறதால தீட்டிப் போடுவான்கள். எல்லாத்தையும் அடக்கிக் கொண்டு இருக்க வேண்டியதுதான்.

கலியாணம் முடிச்ச புதிசில் பாத்தாப் பிறகு என்ர மனிசிய உள்ளபடி உருப்படியா நான் பாத்தது அண்டைக் குத்தான். தாலி, தொங்கட்டான் எண்டு உள்ள நகை நட்டெல்லாத்தையும் அம்மனுக்குச் சாத்துமாப்போல சாத்தியண்டு அலங்கார பூசிதையா என்ர சகதர்மணி எழுந் தருளி வந்திருக்கிற அந்தத் திருக்கோலத்தைக் காணக் கண்ணராவிப் போச்சுது. மகளையும் குறை சொல்லு மாப்போல விடேல்ல. காப்பு, சங்கிலி, கழுத்துமாலை, கைச்சங்கிலியெண்டு நவீன டிசைனில பாத்துப் பாத்துச் செய்த பணியாரங்களை எல்லாம் போட்டு தங்கப் பவுணான பிள்ளையெண்டு சொல்லுமாப்போல சிங்காரமாத்தான் சோடிச்சிருந்தா.

பிறிஞ்சிப்பலுக்கு முன்னால தன்னும் வளையாத நான், பவ்வியமாக எழும்பி என்னால ஆனமட்டும் வளைஞ்சு நிண்டன். ஆனாலும் நாரிப்பிடிப்பு 30 பாகைக்கு மேல வளைய விடமாட்டன் எண்டிட்டுது. அது அவனுக்கு விளங்கினால் எல்லே. விட்டான் ஒரு நெவிள் அடி செவிட்டைப் பொத்தி. விண் கூவிச்சுது. அரைப் போத்திலை றாவா அடிச்சமாதிரி தலை கிறுகிறுத்தது. அதுக்குப்பிறகு நடந்ததெல்லாம் மங்கலாத்தான் ஞாபகமிருக்கு.

செக் பொயின்ரில ஆமிக்காறன் செக்பண்றதவிட



# கோச்சி ஓடும் ஜீவனம்!

வலுதிறமா மேலை இருந்து கால்வரை தடவி, (பாவம் ஏசன்சிகாறனுக்குத்தான் லக்கில்லாமல் போய்ற்றுது). பாலைப்பழம் போல பொதிஞ்ச வச்ச அந்தக் காசோட மிச்சக்காசையும் அவன் வழிச்சுத் துடைச்செடுத்த விருத்தாந்தத்தை சொல்லித்தான் தெரியவேணுமே?

என்னோட படிப்பிக்கிற சமயபாட டீச்சர் மனிசி ஒண்டும் அதே றெயின்ல புரிசனோட வந்தவை. எங்களைப்போல இல்லாட்டிக்கும் குறையில்லாமல் நகை நட்டெல்லாத்தையும் தாரை வாத்துக் குடுத்துப் போட்டும் மனுசி கிணுங்காமல் செந்தளிப்பா முகத்தை வச்சுக் கொண்டிருந்தது எனக்குப் பெரிய ஆச்சரியமாப் போச்சுது. மண்ணையும் பொன்னையும் சமமா மதிக்கிற அளவுக்கு மனிசி பக்குவப்பட்டிட்டுதாக்குமெண்டு நினைச்சன். மண்டைக் குடைச்சல் தாங்கேலாமல் பிறகொரு நாள் மனிசிட வாயைப் போய்க் கிண்டினன். அப்பதான் விஷயம் வெளிச்சுது. மனிசி போட்டுக் கொண்டு வந்ததெல்லாம் கிலிற்று நகையாம். மனிசனுக்குக்கூட உது தெரியாதாம். உண்மை தெரிய வந்து எப்ப வீட்டில பூகம்பம் வெடிக்கப்போகுதோ எண்டு நடுங்கிக்கொண்டிருந்த மனிசிக்கு வாய்ப்பாப் போயிற்றுது. புரிசனையும் பேய்க்காட்டி வந்த வெங்கணாந்தியளையும் ஏமாத்தி ஒரே கல்லில ரெண்டு மாங்காயடிச்சால் முகத்தில செந்தளிப்பு தாண்டவமாடாமல் வேற என்ன செய்யும்?

அடுத்தடுத்த நாள் பேப்பறில ஒரு மூலேல இந்த நியூஸ் வந்தது. சில நேரம் பாத்திருப்பியள். நாங்கள் போன றெயில்லதான் நடந்ததெண்டு அண்டை அயல்ல இருக்கிறவைக்கோ சொந்தக்காறருக்கோ தெரியாது. நாங்களும் இதைப்பற்றி மூச்சுக்காட்டேல்லை. பொறாமைப் பிடிச்ச சனங்கள். தெரிஞ்சா வீணா சந்தோஷப் பட்டிடுங்கள்! ஏதாவதொண்டை இழந்துதான் ஒண்டைப்பெற வேணும் எண்டுவினம். அதுவும் சரிதான். நகை நட்டுப் போனதோட மனிசிட உடம்பில மாற்றம் வந்திருக்குது.

நகை நட்டக்குடுத்து பிறெஷறை வாங்கி வச்சிருக்கிறா. தங்கத்தின்ர விலை ஏறுதெண்டு பேப்பர் வழிய வாசிக்கேக்க எனக்குமிப்ப பிறெஷர் ஏறீற்றுது.



# உலகக் கிண்ணம் யாருக்கு?

சீ.கே. மயூரன்

**கால்பந்தாட்ட** ரசிகர்களின் கனவுத் திருவிழா இம்மாதம் ஜூன் 11 ஆம் திகதி முதல் ஆரம்பித்துள்ளது.விளையாட்டுலகில் அதிக ரசிகர்களைக் கொண்ட கால்பந்தாட்டத்தின் சிகரமாய் உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டிகள் அமைகின்றன. 1930 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை 18 உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்றுள்ளன. 19 ஆவது உலகக் கிண்ண போட்டிகள் தற்போது தென்னாபிரிக்காவில் ஆரம்பமாகியுள்ளன. 32 அணிகள் அடுத்த மாதம்வரை மோதி தம் பலத்தை நிரூபிக்கவுள்ளன. மொத்தம் 64 போட்டிகள் நடைபெறவுள்ளன.

உலகக் கிண்ணக் கால்பந்தாட்ட போட்டிகளை நடாத்தும் சர்வதேச கால்பந்தாட்ட கூட்டமைப்பான பீபா(fifa) 1904 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பின்னரே சர்வதேச அளவில் கால்பந்தாட்டம் ஒரு விளையாட்டாக அங்கீகரிக்கப்பட்டு ஒலிம்பிக் போட்டிகளில் இணைத்துக் கொள்ளப்பட்டது. அதனடிப்படையில் பிரான்சில் நடந்த ஒலிம்பிக்கில் கால்பந்தாட்டம் இணைத்துக்கொள்ளப்பட்டது. இறுதிப் போட்டியில் உருகுவே, சுவிட்சர்லாந்து அணிகள் மோதின. அதில் உருகுவே வெற்றி பெற்று முதல் ஒலிம்பிக் கால்பந்தாட்ட சாம்பியனானது.

அதன் பின்னர் சர்வதேச அளவில் உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளை நடத்த சர்வதேச கால்பந்தாட்டக் கூட்டமைப்பு தீர்மானித்தது. முதன் முதலில் 1930 ஆம் ஆண்டு உருகுவே நாட்டில் உலகக் கிண்ணக் கால்பந்தாட்ட போட்டிகள் நடைபெற்றன. அதில் உருகுவே வெற்றிபெற்று சம்பியனானது.

4 ஆண்டுகளுக்கொருமுறை போட்டிகள் நடைபெறும் வகையில் அட்டவணைப்படுத்தப்பட்டன.

| Group A | Group B | Group C | Group D |
|---|---|---|---|
| South Africa | Argentina | England | Germany |
| Mexico | Nigeria | USA | Australia |
| Uruguay | Korea Republic | Algeria | Serbia |
| France | Greece | Slovenia | Ghana |

| Group E | Group F | Group G | Group H |
|---|---|---|---|
| Netherlands | Italy | Brazil | Spain |
| Denmark | Paraguay | Korea DPR | Switzerland |
| Japan | New Zealand | Côte d'Ivoire | Honduras |
| Cameroon | Slovakia | Portugal | Chile |

இருந்தாலும் உலகப்போர் காரணமாக 1942, 1946 ஆம் ஆண்டுகளில் போட்டிகள் நடைபெறவில்லை. அதன் பின் 1950 ஆம் ஆண்டு முதல் இன்று வரை எந்தவித தடங்கலுமின்றி போட்டிகள் நடைபெற்று வருகின்றன.


இதுவரை அதிக உலகக் கிண்ண கால்பந்தாட்ட தொடரில் (19) பங்குபற்றிய பெருமை பிரேசில் அணிக்கே உள்ளது. இத்தாலி 17ஆவது தடவையாகவும், ஆர்ஜென்ரினா 15 ஆவது தடவையாகவும் மெக்ஸிகோ 14ஆவது தடவையாகவும், ஸ்பெயின் 13ஆவது தடவையாகவும் களம் காண்கின்றன.

பிரேசில் 5 முறையும் இத்தாலி 4 முறையும், ஜெர்மனி 3 முறையும், உருகுவே மற்றும் ஆர்ஜென்ரினா என்பன 2 முறையும், பிரான்ஸ், இங்கிலாந்து என்பன 1 முறையும் உலகக் கிண்ணத்தை சுவீகரித்துள்ளன.

இம்முறை பல நாடுகளின் முக்கிய வீரர்கள் உபாதைக்குள்ளாகி போட்டிகளில் பங்கேற்க முடியாமையால் அந்த அணிகள் சாதிக்குமா என்பது கேள்விக்குறியே.

பிரேசில், இத்தாலி, இங்கிலாந்து, ஜேர்மனி, ஆர்ஜென்ரினா, மெக்ஸிக்கோ போன்ற நாடுகள் முன்னேறிச் செல்லுமென எதிர்பார்க்கலாம்.

உலகக் கிண்ணத்தை முத்தமிடப் பல அணிகள் முயன்றாலும் உலகக் கிண்ணம் யார்வசம் சென்று முத்தம் பெற ஆசைப்படுகிறதோ .........




# இதுவரை நடைபெற்றுள்ள உலகக் கிண்ணக் கால்பந்தாட்ட போட்டிகள் ஒரே பார்வையில்

| ஆண்டு | போ. ந. பெ. நாடு | வெ. பெ. அணி | ப. ப நா. எ |
|---|---|---|---|
| 1930 | உருகுவே | உருகுவே | 13 |
| 1934 | இத்தாலி | இத்தாலி | 16 |
| 1938 | பிரான்ஸ் | இத்தாலி | 15 |
| 1950 | பிரேசில் | உருகுவே | 13 |
| 1954 | சுவிட்சர்லாந்து | மேற்குஜேர்மனி | 16 |
| 1958 | சுவீடன் | பிரேசில் | 16 |
| 1962 | சிலி | பிரேசில் | 16 |
| 1966 | இங்கிலாந்து | இங்கிலாந்து | 16 |
| 1970 | மெக்ஸிகோ | பிரேசில் | 16 |
| 1974 | ஜெர்மனி | மேற்குஜேர்மனி | 16 |
| 1978 | ஆர்ஜென்ரினா | ஆர்ஜென்ரினா | 16 |
| 1982 | ஸ்பெயின் | இத்தாலி | 24 |
| 1986 | மெக்ஸிகோ | ஆர்ஜென்ரினா | 24 |
| 1990 | இத்தாலி | மேற்குஜேர்மனி | 24 |
| 1994 | அமெரிக்கா | பிரேசில் | 24 |
| 1998 | பிரான்ஸ் | பிரான்ஸ் | 32 |
| 2002 | கொரியா/ ஜப்பான் | பிரேசில் | 32 |
| 2006 | ஜெர்மனி | இத்தாலி | 32 |
| 2010 | தென்னாபிரிக்கா | ??????? | 32 |

குறிப்பு: போ. ந.பெ. நாடு - போட்டிகள் நடைபெற்ற நாடு.
வெ.பெ. அணி, - வெற்றி பெற்ற அணி,
ப. ப நா. எ - பங்குபற்றிய நாடுகளின் எண்ணிக்கை



டொக்டர்.எம்.கே. முருகானந்தன்

# எதுவுமே செய்ய முடியவில்லை. களைப்பாயிருக்கு!

மருத்துவரிடம் வருபவர்களில் பலர் களைப்பாயிருக்கு என்று சொல்லுவார்கள். காய்ச்சல், வயிற்றோட்டம், வாந்தி போன்ற நோய்களால் போஷாக்கு இழந்தவர்கள் களைப்பாக இருந்தால் அது புரிந்து கொள்ளக் கூடியதே. ஆனால் நோய்களால் பீடிக்கப்பட்டவர்கள் மட்டுமன்றி மிகவும் ஆரோக்கிய மான உடல் நிலையில் இருப்பவர்கள் அல்லது அவ் வாறு பார்வைக்குத் தென்படுபவர்கள்கூட சொல்லிக் கொண்டு வருவார்கள்.

'சத்தெல்லாம் பிழிஞ்சு எடுத்தமாதிரிக் கிடக்கு', 'உடம்புக்கு ஏலாதாம்', 'ஒண்டுமே செய்ய முடிய வில்லை'. இப்படி எத்தனையோ வாசகங்கள். வழமைபோல இயங்க முடியாதிருத்தல், ஊக்கக் கேடு, உற்சாகமின்மை, சோம்பலாக இருத்தல் போன்ற யாவும் இந்தக் களைப்பிற்குள் அடங்கும். ஆங்கிலத் தில் Fatigue என்பார்கள். ஆனால் இது நித்திரை கொள்ள வேண்டும் என்ற நிலை எனப்படும் தியக்கம் (Drowsiness) அல்ல.

பெரும்பாலும் இக் களைப்பு என்பது உடலின் ஒருவித தற்காப்பு முயற்சியாகும். கடுமையான உழைப்பு, உளநெருக்கீடு, போதிய ஓய்வின்மை, உற்சாகமற்ற சூழல் போன்ற வேண்டாத தொல்லையி லிருந்து மீள்வதற்கு எமது உடலும் உள்ளமும் எடுக்கும் எதிர்வினைதான். போதிய ஓய்வு எடுத்ததும், நன்கு தூங்கி எழுந்ததும் அல்லது மகிழ்ச்சியான சூழல் கிட்டியதும் அது, தானாகவே மறைந்துவிடும். பெரும்பாலும் களைப்பு என்பது கடுமையான நிலை அல்ல. பயப்பட வேண்டியதும் இல்லை.

**மருத்துவரிடம் தெளிவாகச் சொல்லுங்கள்**

ஆனால் அவ்வாறு செய்தும் அது மாறவில்லை எனில் மருத்துவரை நாட வேண்டிய தேவை ஏற்படும். மருத்துவரிடம் செல்ல நேர்ந்தால் களைப்பு எத்தகைய வேலைகளின்போது ஏற்படுகிறது? வேலையுடன் தொடர்பில்லை எனின் எந்த நேரத்தில் ஏற்படுகிறது? போன்றவற்றைக் கவனித்துச் சொல்லுங்கள். காலை யில் படுக்கையிலிருந்து விழித்தெழும்போதே சோர் வாக இருந்து, அது நாள் முழுவதும் தொடர்ந்தால் மனச்சோர்வின் அறிகுறியாக இருக்கக்கூடும். மாறாக காலையில் மிக உற்சாகமாக இருந்து, நேரம் செல்லச் செல்ல களைப்பு அதிகரித்துச் சென்றால் அது தைரொயிட் சுரப்பி குறைவாக வேலை செய்வதாக இருக்கலாம். அல்லது காலையில் நலமாக இருந்து சற்று நேரம் செல்ல, சோர்வும் தலைவலியும் சேர்ந்து வந்தால் அது சைனஸ் நோயாக இருக்கலாம். இவ் வாறு பல நோய்களை அறிகுறிகளிலிருந்தே மருத்துவர் ஓரளவு ஊகிக்க முடியும் என்பதால் உங்கள் அறிகுறி களை இயன்றளவு தெளிவாகச் சொல்லப் பழகுங்கள்.

**காரணங்கள் என்ன?**

**இரத்தச் சோகை**

எமது நாட்டிலும் மேலும் பல கீழைத்தேச நாடுகளிலும் இரத்தச் சோகை பரவலாக இருக்கிறது. பொதுவாக ஹீமோகுளோபினின் அளவு ஆண்களில் 13 கிராம்(Hb 13gm) ஆகவும் பெண்களில் 12கிராம் (Hb 12gm) ஆகவும் இருக்க வேண்டும். இது குறைவாக இருந்தால் மூளை உட்பட உடல் உறுப்புகளுக்கு போதிய ஒட்சிசன் கிடைக்காது. இதனால் சோர்வும், களைப்பும், மந்தநிலையும் ஏற்படலாம். பிள்ளைகள் மனம் ஊன்றிப் படிக்க முடியாது சோர்வு தடுக்கும். சுறுசுறுப்பு குறையும். இது படிப்படியாக ஏற்படும் நிலை என்பதால் நோயாளியால் புரிந்து கொள்ள முடியாதிருக்கலாம். உடல், முகம், கண், நாக்கு போன்றவை வெளிறலாக இருப்பதை வைத்து மருத்துவரால் அறிய முடியும். கலபமான இரத்தப் பரிசோதனை மூலம் நிச்சயமாக அறிய முடியம்.

**சளி, பீனிசம்**

தூசி, காலநிலை மாற்றங்கள், கடுமையான மணங்கள், மகரந்தம் போன்றவற்றிற்கு ஒவ்வாமை உள்ளவர்களுக்கு அடிக்கடி சளி, தும்மல், மூக்கடைப்பு போன்ற அறிகுறிகள் தோன்றும். சிலருக்கு அது சைனஸ் தொல்லையாக மாறிவிடுவதும் உண்டு. சைனசைடிஸ் என்பது மண்டை ஓட்டில் நாசிக்கு அண்மையாக இருக்கும் காற்றறைகளில் அழற்சியும் கிருமித்தொற்றும் ஏற்படுவதாகும். இவை யாவும் தலைப்பாரம், களைப்பு, சோர்வுத்தன்மை போன்ற அறிகுறிகளை ஏற்படுத்தும். ஆஸ்துமாவும் இத்தகைய ஒரு ஒவ்வாமைச் சளி நோயே. மேலைநாடுகளில் வசந்த காலங்களில் பெரும்பாலும் காணப்படும் Hay fever இத்தகையதே. இங்கு காலவேறுபாடுகள் தெளிவாக இல்லாத நிலையில் பலருக்கும் நாளாந்தம் தொல்லை கொடுக்கிறது.

**நீடித்து தொல்லை கொடுக்கும் வலிகள்**

மனிதர்களுக்கு பலவிதமான உடல் வலிகள் ஏற்படுகின்றன. உதாரணமாக மோட்டார் சைக்கிளில் செல்லும்போது வீழ்ந்துவிட்டால் அடிபட்ட வலி தாங்க முடியாததாக இருக்கும். ஆனால் இது தற்காலிகமானது. பல வலிகள் வாரக்கணக்கிலோ மாதக் கணக்கிலோ அன்றி வாழ்நாள் பூராவும் தொல்லை கொடுக்கலாம். மூட்டுவாதங்கள், முள், எலும்பு நோய்கள் போன்றவை அத்தகையவை. நீண்ட நாள் நீடிக்கும்போது வலிகள் மனச்சோர்வையும் களைப்பையும் ஏற்படுத்தும்.

**மது மற்றும் போதைப் பொருட்கள்**

இன்று எமது சமுதாயத்தில் மது பாவனை அதிகரித்து வருகிறது. போதைப் பொருட்களும் பலரை வசீகரிக்கின்றன. சிகரட்டும் இதில் அடங்கும். இவை மன உற்சாகத்தைக் கொடுக்கின்றன. ஆனால் அது போலியானது. அதாவது அதை உபயோகிக்கும் போது மட்டுமே உற்சாகத்தைக் கொடுக்கின்றது. உபயோகிக்காதபோது சோர்வும் களைப்பும் தோன்றும். உடனேயே மீள எடுக்கச் சொல்லும். ஆனால் நாட் செல்லச் செல்ல மேலும் அதி களவு பாவித்தாலே பழைய உற்சாகம் கிடைக்கும். நீங்கள் அவ்வாறு உபயோகிப்பவராயின் அதனை உடனே நிறுத்துங்கள். குறைத்துக் குறைத்து நிறுத்தலாம் என எண்ணினால் நீங்கள் உங்களையும் மற்றவர்களையும் ஏமாற்றுவதாகவே இருக்கும். நீங்களாக நிறுத்துவது கடினமாக இருந்தால் மருத்துவ உதவியை நாடுங்கள். உங்களது கணவன் அல்லது மகனது நடத்தையில் திடீர் மாற்றங்கள் ஏற்பட்டால் அவதானியுங்கள். சில நேரங்களில் சோர்வும் வேறு நேரங்களில் அதிக உற்சாகமும் காணப்பட்டால் இதுவும் மது அல்லது போதைப் பொருள் காரணமாக இருக்கலாம். இப்பொழுது பல பெண்களும் இதில் அடங்குகிறார்கள்.

**தூக்கக் குறைபாடு**

பொதுவாக ஒருவருக்கு 6 - 7 மணிநேரத் தூக்கம் தேவை. இல்லாவிடின் மூளையால் சமாளிக்க முடியாது. ஏனெனில் நீங்கள் தூங்கும் போதுதான் மூளையானது தனக்குக் கிடைத்த தகவல்களை ஒழுங்குபடுத்திச் சேமிக்கின்றது. போதிய தூக்கம் இல்லாவிடில் அதைச் செய்ய முடியாது சோர்வுறும். தூக்கக் குறைபாடு ஏற்படுவதற்கு உங்கள் வேலைப் பளுவும் காரணமாக இருக்கலாம். அல்லது நோய்களும் காரணமாக இருக்கலாம். உடல் நோய்கள் மட்டுமின்றி மன உளைச்சல்களும் தூக்கத்தைக் கெடுக்கும். போதிய தூக்கம் என்பது படுக்கையில் கிடக்கும் நேரமல்ல. அமைதியாகத் தூங்கும் நேரம் என்பதாகும். தூக்கத்தில் மூச்சுத் திணறல் (Sleep apnea) சிலருக்கு ஏற்படுவதுண்டு. இதை நீங்கள் உணர மாட்டீர்கள். உங்களுடன் தூங்குபவர், நீங்கள் அமைதியாகத் தூங்குவதையும் திடீரென திணறுவதையும் அவதானிக்கக் கூடும். அவ்வாறெனில் மருத்துவரை கலந்தாலோசிக்கவும்.

**தைரொயிட் சுரப்பி நோய்கள்.**

தைரொயிட் சுரப்பி என்பது எமது கழுத்தில் குரல் வளையை அண்டியிருக்கும் ஒரு சுரப்பியாகும். இது



தைரொக்சின் என்ற ஹோர்மோனைச் சுரக்கிறது. இது குறைவாகவோ அன்றி அதிகமாகவோ சுரந்தால் களைப்புச் சோர்வு, வியர்வை, குளிர் தாங்க முடியாமை, படபடப்பு, எடை குறைதல் அல்லது அதிகரித்தல் போன்ற பல்வேறு அறிகுறிகள் நோயின் நிலைக்கேற்ப தோன்றும். TSH, FT4 போன்ற இரத்தப் பரிசோதனைகள் மூலம் இதனைக் கண்டறியலாம். இப்பிரச்சினை உள்ளவர்களுக்கு சுரப்பியில் வீக்கம் பெரும்பாலும் இருப்பதில்லை. அதேநேரம் கழுத்தில் கழலை இருக்கும். அனைவருக்கும் இந்நோய் இருக்கிறது எனவும் கருத வேண்டாம்.

**மனச்சோர்வு**

பெரும்பாலானவர்களுக்கு களைப்பு என்பது மனதோடு சேர்ந்தது. மனச்சோர்வு, உள நெருக்கீடு, மனப்பதகளிப்பு போன்ற பல்வேறு உளம் சார்ந்த பிரச்சினை உள்ளவர்களில் முக்கிய அறிகுறி, களைப்பாகத்தான் இருக்கிறது. இதை நோயுள்ளவர்கள் உணர்வதில்லை. உடலில் உள்ள பிரச்சினைக்கு மனம் காரணமாக இருக்கும் என்பதை மருத்துவர் கூறினாலும் பலரும் ஏற்றுக் கொள்வதில்லை. எனக்கு ஒரு கவலையும் இல்லை. யோசனையும் இல்லை என மறுப்பவர்கள் ஏராளம். காரணம் மனநோய்கள் பற்றி எமது சமூகத்தில் இருக்கும் தப்பான அபிப்பிராயம்தான். விசர், பைத்தியம், அங்கொடை எனப் பல பிம்பங்கள் மனநோய்கள் பற்றி அவர்களுக்கு உண்டு. வேலைத் தளத்தில் உள்ள நெருக்கீடு, பரீட்சையில் உச்ச மார்க் பெற வேண்டும் என்ற துடிப்பு, வீட்டிலும் சமூகத்திலும் நிதம் சந்திக்கும் சாதாரண பிரச்சினைகள்கூட உள நெருக்கீட்டிற்கு காரணமாகலாம் என்பதை பலரும் புரிந்து கொள்வதில்லை. எனவே நெருக்கீடுகள் உங்கள் களைப்புக்குக் காரணமாக இருக்கலாம் என்றால் அதை உங்கள் மருத்துவரிடம் கூறுங்கள். அல்லது மருத்துவர் அவை பற்றி தானாக விசாரித்தால் தயங்காமல் வெளிப்படையாகப் பேசி உங்கள் பிரச்சினைக்கு தீர்வு காண முயலுங்கள்.

**வேறு தீவிர காரணங்கள்**

அவை தவிர பல தீவிர நோய்களும் களைப்புக்குக் காரணமாக இருக்கலாம். நீரிழிவு, இருதயச் செயலிழப்பு, சிறுநீரகச் செயலிழப்பு, ஈரல் செயலிழப்பு, சயரோகம், புற்றுநோய்கள் ஏன் எயிட்ஸ் கூட காரணமாகலாம்.

**நீங்கள் செய்ய வேண்டியது**

எனவே போதியளவு தூக்கம், போஷாக்கான உணவு, தினசரி உடற்பயிற்சி, அளவான வேலை, போதிய ஓய்வு, மகிழ்ச்சியான சூழலுக்கு மாறுதல், மன அடக்கப் பயிற்சி (யோகா, தியானப் பயிற்சி), போதைப் பொருள் தவிர்ப்பு போன்ற ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளைக் கடைப்பிடித்துப் பாருங்கள். அவ்வாறு செய்தும் உங்கள் களைப்பு குறையாவிட்டால் மருத்துவ ஆலோசனை பெறுவது மிகவும் அவசியம் ●●●

**SMS**

அன்பே..

நான் சூரியன்... நீ சந்திரன்!

சந்திரன் சூரியனிடமிருந்து வெளிச்சத்தை வாங்கும்

நீ என்னிடமிருந்து பணம் வாங்குவ!

ஆனா ரெண்டு பேருமே திருப்பித் தரமாட்டீங்க!




# Keyboard ஐ உளவு பார்க்கும் Software




வேலைப்பழு, பதட்டம் ஆகியவற்றால் நாம் சிலநேரம் எம்மை அறியாமலேயே எமது கணனியை off பண்ணாமல் போகலாம். அல்லது எமது Password ஐ யாராவது Hack பண்ணி திருட்டுத்தனமாக எமது கணனிகளைப் பயன்படுத்தலாம். அப்படி நாம் இல்லாத நேரம் அவர்கள் எமது கணனியைப் பயன்படுத்தி என்னென்ன செய்திருக்கின்றனர் என்று பார்ப்பதற்கு ஒரு மென் பொருள் இருக்கின்றது.


உங்களைத் தவிர வேறு யாருக்கும் தெரியாமல் பின்புலத்திலேயே இச்சுட்டியை நீங்கள் இயங்கவைக் கலாம். இது இயங்குகின்றது என்று உங்கள் கணனியை பயன்படுத்துபவர்களுக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் என்ன செய்தார்கள் என்பதை ஒரு கோப்பில் நமக்குத் தருகிறது. கீழே உள்ள படத்தை பார்க்கவும்.




start என்ற பட்டனைத் தட்டினால் இந்த மென்பொருள் இயங்க ஆரம்பித்து விடும். பின் நீங்கள் கணனியை விட்டுச் செல்லும்போது Hide என்ற பட்டனைத் தட்டினால் பின்புலத்தில் இயங்க ஆரம்பித்து விடும். மீண்டும் கொண்டுவர Ctrl+Alt+Shift+(F12/F10/F9 - இவற்றில் ஏதாவது ஒன்று)ஐ அழுத்தவும்.



உதாரணமாக நீங்கள் சென்ற பின் உங்கள் கணனியைப் பயன்படுத்தி ஒருவர் டைப் செய்கிறார் என வைத்துக்கொள்வோம். அவர் என்ன டைப் செய்தார் என்பது அனைத்தும் நமக்குத் தெரிந்து விடும். படத்தைப் பார்க்கவும்.




டைப் செய்த அனைத்தும் txt கோப்பாக எங்கே save ஆக வேண்டும் என்பதை நாம் option சென்று கூறலாம். கீழே உள்ள படத்தைப் பார்க்கவும். இந்த soft பொருளை டவுன்லோட் செய்ய இந்தச் சுட்டியை தரவிரக்கம் செய்யவும். http://www.den4b.com/ downloads.php?project =Hooker

# வாசகர் கருத்து!

ஜுன் மாத சஞ்சிகை பார்த்தேன். பார்ப்பதற்கு புதிதாக இருந்தது. சிறையிலிருந்து ஒரு மடல் மனதை நெகிழ வைத்துவிட்டது. கண்ணேறு சூப்பர். மருத்துவ கட்டுரை எழுதும் முருகானந்தத்துக்கு ஒரு சபாஷ் போடலாம். மிகவும் ஜனரஞ்சகமாக எழுதுகிறார். இலக்கியம் நயத்துடன் வெளிவந்திருந்தது. தோட்டியின் பதிவு காலத்தின் தேவை. எழுதாவிட்டால் திருந்த மாட்டார்கள்.

**எம். முருகதாசன், கொட்டாஞ்சேனை**

இருக்கிறமுக்கு ஆரம்பத்திலேயே வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் புதிய முயற்சியில் வெளியிட்டமைக்கு. புத்தகத்தை எடுத்ததும் முதலில் நான் பார்ப்பது கடைசிப் பக்கத்தைத்தான். காரணம் இருப்பை பார்ப்பதற்கு. ஆனால் அவ்விடத்தில் கொஞ்சநேரம் இருந்தது. நானும் என்ன என்று வாசித்தேன். அட இந்த 8 இல் இவ்வளவு இருக்கா என்று வியந்தேன். அனைத்து ஆக்கங்களும் நன்றாக இருக்கின்றன. வாசிப்பதற்கு இலகுவாக இருக்கின்றது.

**வி. சொக்கலிங்கம், வத்தளை**

ஆசிரியர் அவர்கட்கு வணக்கம். கடந்த இருக்கிறம் புதிய அமைப்பில் வெளிவந்ததைப் பார்த்தேன். நல்ல மாற்றங்களை நிச்சயம் ஏற்றுக்கொள்ளலாம். கிரைம் பக்கம் திகிலூட்டுகின்றது. வடக்கு, கிழக்கு ஆக்கங்களை மட்டுமே பிரதிபலித்து வந்த இருக்கிறமில் அண்மைக்காலமாக மலையக எழுத்தாளர்கள் மற்றும் மலையக பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட ஆக்கங்களும் வெளிவருவது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. வாழ்த்துக்கள்.

**மா.செல்வராஜா, ஹட்டன்**

சென்ற இருக்கிறம் பார்த்தேன். கொம்பனித் தெருவில் நடந்த அராஜகத்தை பிரதிபலிக்கும் அட்டைப்படம் சிறப்பாக இருந்தது. முற்றிலும் வித்தியாசமான அமைப்பினைக் கொண்டு வெளிவந்துள்ளது. ஆக்கங்கள் வழமையாக நாங்கள் எதிர்பார்த்ததைப் போலவே வெளிவந்துள்ளன. ஆசிரியர் தலையங்கம், பதிப்பகத்தார், கார்ட்டூன், க்ரைம் பக்கம், தொடர், கட்டுரை, சட்டம், மருத்துவம், இலக்கியம், தோட்டியின் பதிவு என அனைத்து ஆக்கங்களுமே சிறப்பாக இருக்கின்றன. தொடர்ந்து வளர வாழ்த்துக்கள்.

**ந. சிவராஜினி, வெள்ளவத்தை**

வணக்கம் கடந்த இருக்கிறம் கிடைத்தது. கிடைக்க வேண்டிய திகதியில் அல்ல. மிகவும் தாமதமாகவே கிடைத்தது. இது வழமையாக நிகழும் ஒரு சம்பவம். ஒரு இதழ் அதற்குரிய திகதியில் வெளிவரவில்லையாயின் அதைப் பற்றிய எதிர்பார்ப்பு குறைந்துவிடும் என்பதை புரிந்து கொள்ளுங்கள். உங்கள் சஞ்சிகையை வாங்க கடைக்குச் சென்றால் இன்னும் வரவில்லை என்று கூறுகின்றனர். நாங்கள் எத்தனை முறை சென்று கேட்பது? ஆகவே சில நேரம் அதற்கு பதில் வேறு சஞ்சிகைகளை வாங்கிச்செல்வதும் உண்டு. உரியவர்கள் கவனத்தில் எடுக்கவும்.

**எம். மதுராந்தன், வவுனியா**




**வாசகர்களே! இருக்கிறம் பற்றிய உங்கள் விமர்சனங்களையும், ஆலோசனைகளையும் தபாலூடை மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். 'வாசகர் கருத்து' பகுதியில் பிரசுரிக்க காத்திருக்கின்றோம்.**

முகவரி- இருக்கிறம்,
3, டொரிங்டன் அவனியூ,
கொழும்பு - 07
மின்னஞ்சல் - irukiram@gmail.com

# வண்டும் வனிதையரும்

மணிப்புலவர் மருதூர் ஏ.மஜீத்



தமிழ் இலக்கியப் பரப்பிலே புலவர்கள் பெண்களை மலருக்கு ஒப்பிட்டுப் பாடுவது சர்வசாதாரணமான ஒரு நிகழ்வு என்பதை நாம் அறிவோம்.

மங்கையர்கள் மலர்களென்றால், வண்டுகள் அவர்களை நாடிச் செல்வது இயற்கையல்லவா?

இதனாற்றான் போலும் தமிழ் இலக்கியப் பரப்பிலே வண்டும் வனிதையரும் பற்றிய பாடல்களை நாம் ஏராளமாகக் காணமுடிகிறது. அப்படிப்பட்ட தமிழ் இலக்கிய பாடல்களில் சிலவற்றை இங்கு எடுத்து நோக்குவோம்.

தமிழ் இலக்கிய பரப்பிலே சிற்றிலக்கிய நூல் வரிசையிலே நளன் சரிதம் கூறும் நளவெண்பா மிகமுக்கிய இடத்தினை கொண்டுள்ளதை நாம் அறிவோம். இதற்கு அதன் கதையும் ஒரு காரணம் எனலாம். நளன் - தமயந்தி காதல் விவகாரம் ஒரு வித்தியாசமான பாங்கினையுடையது. இவர்களது காதல் விவகாரத்தில் தலையிட்ட வில்லர்கள் சாதாரண மனிதர்களல்லர், சகல சக்தியும் கொண்ட தேவர்கள். அதனால்தான் நளன் - தமயந்தி திருமண விழாவினை நாம் எல்லோருமே ஆசிர்வதிக்க வேண்டியவர்களாக உள்ளோம். இனி விடயத்திற்கு வருவோம்.

நளன், தமயந்தியைக் காதல் திருமணம் செய்து தனது நிடத நாட்டிற்கு அழைத்துச் செல்கின்றான். தேரிலே நளனின் அருகே இருந்தவண்ணம், தமயந்தி தனது கணவனின் நாட்டின் சிறப்பினையும், அழகினையும் ரசித்தவண்ணம் பூரிப்படைகிறாள்.

நளன் இடையிடையே தமயந்தியைப் பார்த்து 'அதோ பார், இதோ பார்' என சில காட்சிகளைச் சுட்டிக்காட்டி தமயந்தியை மகிழவைத்ததோடு தானும் மகிழ்கின்றான். இப்படியாக தமயந்திக்குக் காட்டிய காட்சிகளில் ஒன்று "வேர்த்தாளைக் காண்" என்ற காட்சி.

நளன் தமயந்தியைப் பார்த்து 'அதோ! வேர்த்துப் போய் நிற்கின்ற ஒரு பெண்ணைப் பார்' எனக் காட்டினான். நளன் காட்டிய அந்தப் பெண் எதற்காக வேர்த்தாள்?

கொள்ளி கொத்தி வேர்த்தாளா?<br>
அல்லது<br>
நெல்லுக்குத்தி வேர்த்தாளா?<br>
அல்லது<br>
வயல் வேலை செய்து வேர்த்தாளா?<br>
அல்லது<br>
வீட்டுவேலை செய்து வேர்த்தாளா?<br>
எதற்காக வேர்த்தாள்?

மேற்கூறிய எதனையும் அவள் செய்யவில்லை. அப்படியாயின் எதற்காக வேர்த்தாள்?

நளவெண்பாவில் புகழேந்திப் புலவரே அதனைக் கூறுகிறார்.

மங்கையொருத்தி<br>
மலர் கொய்வாள் வான்முகத்தை<br>
பங்கயமென்றெண்ணிப் படிவண்டை<br>
செங்கையால் காத்தாள்<br>
அக்கை மலரை<br>
காந்தள் எனப் பாய்தருமே



(வேந்து - அரசன்) அதாவது நளமகாராசன், வேர்த்தாளைப் பார் எனக் காட்டினான்.

எப்படி வேர்த்தாள்? வேர்த்த அந்த மங்கை மலர்த் தோட்டத்தில் நின்று மலர் கொய்து கொண்டிருந்தாள். அவளுடைய வான் முகத்தை - அழகான முகத்தை, பங்கயமென்றெண்ணி -தாமரை மலர் என நினைத்து, படிவண்டை - மொய்க்கின்ற வண்டை, செங்கையால் காத்தாள் -செந்நிறமான தனது கைகளால் தட்டிக் காத்தாள். அக்கைமலரை - அவளுடைய சிவந்த அழகிய கையை காந்தள் மலர் என நினைத்து வண்டு பாய்தலுமே வேர்த்தாளைக் காண் என்றான் வேந்து.


வண்டிற்கு மலர் எது? முகம் எது? கை எது? என காணமுடியாத - இனங்காண முடியாத தவிப்பு நிலை. மங்கைக்கோ அவ்வண்டினைத் துரத்தி வேர்க்கின்ற நிலை.

மலர்த் தோட்டத்திலே மங்கையின் முகம், கை, எல்லாமே மலர்களாகவே படுகிறது வண்டிற்கு.

அதனால் வண்டு மங்கையின் முகத்திலே மொய்க்கிறது. அதனைத் தன் கையால் தடுக்கிறாள். கையைக் காந்தள் மலர் என நினைத்து மொய்க்கிறது. அதனைத் தடுக்கவே மீண்டும் முகமாகிய தாமரை மலரில் போய் மொய்க்கிறது. வண்டிற்கு மயக்க நிலை. மங்கைக்கோ அவதிநிலை. அதனால் மங்கை வேர்த்துவிட்டாள். நிடத நாட்டின் சிறப்பை, பெண்களின் அழகை சொல்லாமல் சொல்லிக் காட்டிப் பெருமையடைகிறான் நளன்.

இதனைப் படம் பிடித்துக் காட்டிப் பெருமை யடைகிறார் புலவர்.

வேர்த்தாளைக் காண் என்றான்
வேந்து
மங்கையொருத்தி மலர் கொய்வாள்
அவள் வான் முகத்தை-
பங்கயமென்றெண்ணிப் படிவண்டை
தன் செங்கையால் காத்தாள்,
காத்தாளின் செங்கையை
வண்டு காந்தள் என நினைத்துப்
பாய்தறுமே வேர்த்தாள்
அப்படி வேர்த்தாளைக் காண் என்றான்
வேந்து.




**சிறுநீரகக் கல் உருவாகாமல் தடுக்கும் லெமன் ஜூஸ்**

**சிறுநீரகத்தில் கல் உருவாகாமல் எலுமிச்சைச் சாறு தடுக்கும் என்று அமெரிக்க மருத்துவ நிபுணர் தெரிவித்துள்ளார்.**

'தினசரி 4 ஸ்பூன் எலுமிச்சைச் சாற்றை இரண்டு லீட்டர் தண்ணீருடன் கலந்து சிறிது சிறிதாக சிலரை குடிக்கச் செய்து பரிசோதித்தோம். சிறுநீரகத்தில் கற்கள் சேர்வதற்கான வாய்ப்பு 1 புள்ளியில் இருந்து 0.13 புள்ளியாகக் குறைந்தது தெரிய வந்தது. எலுமிச்சையில் சிட்ரஸ் அதிகளவில் உள்ளது. மற்ற சிட்ரஸ் நிறைந்த பழங்களைக் காட்டிலும் சிறுநீரகத்தில் கல் உருவாகாமல் தடுப்பதில் எலுமிச்சை சிறப்பாக செயல்படுகிறது. எலுமிச்சை, சாத்துக்குடி தவிர்த்து மற்ற பழங்களில் சிட்ரஸ் மிகக் குறைவாகவே உள்ளது' என அமெரிக்காவின் சிறுநீரக நல மையத்தின் இயக்குனரான ரோஜர் சர் கூறியுள்ளார்.



எனவே தினசரி உணவில் சேர்த்துக்கொள்ளும் உப்பு, கல்சியம், புரோட்டீன் ஆகியவற்றின் பாதிப்பைக் குறைக்க எலுமிச்சைச் சாறு மிகவும் உதவும். உப்பில் உள்ள கால்சியம்தான் சிறுநீரக கல் உருவாவதில் அதிக பங்கு வகிக்கிறது. எனவே உணவில் உப்பின் அளவைக் குறைப்பதன் மூலம் கல் உருவாவதை தவிர்க்க முடியும் என்றார் ரோஜர் சர்.

இளமை புதுமை

# 'பெண்கள்தான் ஜாக்கிரதையாக இருக்க வேணும்!

வர்ஷினி

அண்மையில் மட்டக்குளியில் இடம்பெற்ற விடியோ மற்றும் புகைப்பட பயிற்சிநெறிப் பட்டறையொன்றில் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பயிற்சியாளர்கள் வந்திருந்தனர். இப்பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றிய ஜெனூபா, கலாரதினி, நிஷாந்தினி, திலகேஸ்வரி ஆகியோரை இளமை புதுமைக்காக சந்தித்து உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது.

ஆரம்பத்திலேயே யார் கதைப்பது என அறையில் ஒரே குழப்பமும் சத்தமுமாகவிருந்தது. 'ஹேய் நீ கதை! நீ கதை!' என சற்றுநேரம் சிரிப்பிலேயே களைகட்டியது அந்த அறை. சாதாரணமாக கதைக்க வெளிக்கிட விசயம் சற்றே சூடேறியது. காரணம் கலாட்டாவின் கதாநாயகர்கள் ஆண்களாயிற்றே. பிறகென்ன? போட்டு தாக்கு தாக்கு என தாக்கிவிட்டனர் அந்த மகளிர் அணியினர்.

முதலில் சிக்கியது ஜெனூபாதான். 'நான் அன்றாடம் office க்கு போக ஒரு மணித்தியாலம் எடுக்கும். பஸ்ஸில் சிலநேரம் சீட் கிடைக்கும். சிலநேரம் சீட் கிடைக்காது. கிடைத்தால் இருப்பம். கொஞ்ச நேரத்தால யாராவது ஆம்பளைங்க கிட்ட வந்து நிற்பாங்க. கொஞ்ச நேரத்தால பார்த்தா என்னவோ உரசுற மாதிரி இருக்கும். என்ன எண்டு பார்த்தால் தள்ளி நிற்பாங்க. எண்ட சட்டை அயன் பண்ணாமல்தான் இருந்தது. அவசரத்துல பஸ் வந்துட்டுது. நானும் போட்டுட்டு வந்துட்டன். office ல போய் பார்த்தால் இந்த பக்கத்துல இருந்த ஆள் உரசுன உரசுல எண்ட சட்டை அயன் பண்ண பட்டுட்டுது. நான் ஏலாத கட்டத்துல எழும்பி நிண்டுட்டன்' என்று சொல்ல கூடியிருந்த எல்லோரும் கொல்லென்று சிரித்தனர்.

'அதுமட்டுமல்ல. இன்னும் எத்தனையோ விசயங்கள் இருக்கு. ஆனால் அதெல்லாம் வாயால் சொல்ல முடியாது' என்று சொன்ன கலாரதினி ஏதோ நினைவு வந்தவளாய் மனதுக்குள் சிரித்துக் கொண்டாள்.

ஹட்டனிலிருந்து வந்திருந்த திலகேஸை எல்



லோரும் கேள்விக் கணைகளால் துளைத்தனர். திருமணம் முடித்து ஏழு வருடங்கள் கடந்துவிட்டாலும் கூட எல்லோரையும் குறும்புத்தனத்துடன் நையாண்டி பண்ணிக்கொண்டிருந்த அவர் 'திருமணம் என்பது இப்போது சீதனத்தாலதான் தீர்மானிக்கப்படுகிறது. உதாரணத்துக்கு ஒரு வீட்டில் 300,000 ரூபா சீதனமாக கொடுக்க இருந்தால் நாங்க போய்ட்டு பதில் அனுப்புறம் எண்டு சொல்லிட்டு போவாங்க. அந்தப் பொண்ணும் எதிர்பார்ப்போட இருக்கும். அதேநேரம் வேறு ஒரு பெண் வீட்டில் 500,000 ரூபா தாறம் எண்டு சொல்லிட்டாங்க எண்டால் அதயே கட்டிக்குவாங்க. அந்த பொண்ணவிட பெட்டரா வேற எங்கயாவது கிடைச்சா அதயும் வச்சிக்குவாங்க. இது என்னோட உறவு முறையில் உள்ள ஒருவருக்கும் என் நண்பர் ஒருவருக்கும் நடந்து இருக்கு. நாங்கதான் ஜாக்கிரதையாக இருந்து இவங்ககிட்ட இருந்து தப்பித்துக் கொள்ளணும்' என்றார் கவலையோடு.

இன்னும் சில மாதங்களில் புதுமணப்பெண் ஆகப்போகும் ரதினி பெண்களை சிறிதும் விட்டுக்கொடுக்காதவர். மட்டக்களப்பிலிருந்து வந்திருந்த இவர் பெண்கள் அமைப்புகளுடன் இணைந்து வேலை செய்வதால் நிறைய விடயங்களை அறிந்து வைத்திருந்தார். 'இப்போ ஆண்களை நம்பி ஏமாந்து போறது அதிகமா இருக்கு. அதுல ஒரு சம்பவம் ஒரு பெண் மிஸ்ட் கோல் ஒண்டால பாதிக்கப்பட்டது. சகோதர இனத்தைச் சேர்ந்த ஒரு பையன் முபாரகன் எண்டு தமிழ் பெயர வச்சிக்கொண்டு அந்த பிள்ளை யோட Phone ல கதைச்சி கதைச்சி லவ் பண்ணிறதா ஏமாத்தியிருக்கான். ஒருநாள் அந்த பையன் தண்ட ஊருக்கு வழியெல்லாம் சொல்லி வரச்சொல்லியிருக் கார். அந்த பிள்ளையும் அவர நம்பி 200 ரூபா காசோட வீட்ட விட்டு வந்து தொடர்ந்து பயணம் செய்ய காசு இல்லாம அவனுக்கு call பண்ணி இருக்கு. அதேநேரம் அவளிண்ட வீட்டுலயும் அந்த பிள்ள கதைச்ச டெலி போன் நம்பர வச்சி அவனோட கதைச்சிருக்காங்க. அந்த பையன் தான் தப்பித்துக் கொள்றதுக்காக அந்த பிள்ளைய வர வேண்டாம் எண்டு திரும்பி போக சொல்லி இருக்கான். வந்த பிள்ளைக்கு திரும்பி போக காசில்ல. தனியே இந்த பிள்ள பஸ் தரிப்பிடத்துல நிற்கிறதா எங்களுக்கு வந்த தகவலையடுத்து நாங்க விசாரிச்சி அந்தப் பிள்ளய மீட்டுக் கொண்டு வந்திட்டம். இந்தப் பிள்ள ஒருவேளை அங்கு சென்று இருந்தால் நிச்சயம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு இருக்கும். அத்தோடு இந்த யுத்தத்துக்கு பிறகு பிள்ளைகள் பல்வேறு வழிகளில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு இருக்காங்க. பொம்பிள பிள்ளைகள்தான் சற்று விழிப்பா இருக்கனும். பெற்றோரும் தங்கள் பிள்ளைகள்மீது சற்று விழிப்புணர்வாக இருக்கணும். கதையா வளர்த்து அதுல ஏமாறுறது பெண்கள்தான்' என்று நீண்ட பெருமூச்சோடு சொல்லி முடித்தார்.

மன்னாரைச் சேர்ந்த நிஷாந்தினி பெண்களின் உரிமைகள் தொடர்பாக கண்காணிக்கும் ஒரு நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். ஒருமுறை தான் பஸ்ஸில் பயணம் செய்யும்போது 4 ஆண்கள் அந்த பஸ்ஸில் நின்றுகொண்டு பயணித்த இளம் பெண்களுக்கு எல்லா வகையிலும் இடையூறு விளைவித்ததைப் பற்றி கூறினாள். 'குடும்ப கஷ்டம், சுமைகள், பொறுப்புகளால அன்றாடம் நரக வேதனைய அனுபவிச்சிக்கொண்டு பெண்கள் வேலைக்கு போறாங்க. கேட்டா தனி பஸ் பிடித்து வரலாந்தானே, பொது பஸ் எண்டா எல்லாத்தயும் அட்ஜஸ்ட் பண்ணிட்டுதான் போகணும் எண்டு சொல்வாங்க. இந்த பிள்ளைகள் தங்களுக்கு இப்படி நடந்ததெண்டு சொல்ல முன்வருவார்களா? இப்படி இவர்கள் வாய மூடிக்கொண்டு, பயந்துகொண்டு, ஏன் பெரிதாக்க வேண்டும்? எண்டு நினைக்க அவன்களின் சேட்டை கூடுமே தவிர குறையாது' என்று சற்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறினார். கேட்டுக் கொண்டிருந்த எல்லோரும் அதை ஆமோதித்தனர்.


'திலகேஸ் அக்கா நீங்கள் சொல்லுங்கோ பெண்கள் எப்படி உடை அணியனும் எண்டு விரும்புறீங்க' என்று நிஷாந்தினி கேட்டாள். தான் அணிந்திருந்த உடையை எதிரேயிருந்த கண்ணாடியில் அழகு பார்த்துக்கொண்டே 'உடை அணியிறதுல எந்தவிதமான பிரச்சினையுமே இல்ல. எப்படி வேணுமெண்டாலும் அணியலாம். எதை வேணுமெண்டாலும் உடுத்தலாம். ஆனால் பாதுகாப்பாக இருந்தால் சரி. நம்மட கலாச்சாரம் முக்கியம்தான். அதோட நாகரீகமாகவும் உடுத்தினால் சரி' என்றார் திலகேஷ்.

'இப்ப வெள்ளைக்காரிகளும்தான் அரைகுறையா உடை அணிந்திட்டு வாறாங்க. வெள்ளைக்காரன் அவண்ட வேலயத்தான் பார்த்துட்டு இருப்பான். ஆனால் நம்மட ஆண்கள் உரசுவதும் சீண்டுவதும் என சேட்டை விடுவார்கள். 'ஆ' என வாயைத் திறந்து கொண்டு பார்ப்பானுகள்' என்று ஆண்களை கடுமையாக சாடினாள் ரதினி. உடனே நிஷாந்தினி ரதினியைக் காட்டி 'இவ முன்ன அப்படித்தான் உடையணிவாள். இப்ப மாப்பிளைக்கு பிடிக்கேல எண்டு மாறிவிட்டாள்' என்று உண்மையைப் போட்டுடைத்தாள். எல்லோரும் கூக்குரலிட்டுச் சிரித்தனர்.

'அது அவரவர் இஷ்டம். மற்றவங்களை மாற்றனும் எண்டு நினைக்கக்கூடாது. இவ்வளவு செய்யும் ஆண் தன் தங்கை றோட்டால போகேக்க தவறாக பார்ப்பானா? பேசுவானா? ஒரு பெண் றோட்டால போகேக்க அவட மனசு புண்படுறமாதிரி கதைக்கிறது ஒரு டீசிங்!' என்று ரதினி சற்று அதிகமாகவே ஆவேசப்பட்டாள்.

ஆரம்பத்தில் கதைப்பதற்கு என்னிடம் தலைப்பு கேட்டுக்கொண்டு இருந்தவர்கள் பிறகு ஆளையாள் விளாசிக்கொண்டு இருந்தார்கள். 'ஆண்களும் சரி பெண்களும் சரி பிறக்கும்போது யாரும், தான் இப்படி இருக்கவேண்டும் என நினைத்துக்கொண்டு பிறப்பதில்லை. இந்த சமூகம்தான் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறான பழக்கவழக்கங்களையும் கட்டுப்பாடுகளையும் திணித்து வேறுபடுத்திவிட்டது. ஆகவே இதற்கு இந்த சமூகம்தான் பதில் கூற வேண்டும்' என்று திலகேஸ் ஒருவாறு இந்த காரசாரமான விவாதத்தை முடித்துவைத்தார்.

ஏன் பெண்களுக்கு மட்டும்தான் உடுப்பை ஒரு அளவுகோளாக நாம் வைக்கின்றோம்? ஏன் பெண்களின் உடலைப் பற்றி மட்டும்தான் கவலைப்படுகிறோம்? யோசித்துக்கொண்டே கிளம்பினேன்.



# கசிப்பில் அட்டாம்பிட்டிய கிராமம்!

கே. பிரபா

பதுளை நகரிலிருந்து சுமார் 20 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் அட்டாம்பிட்டிய என்னும் சிறிய கிராமத்தைப் பற்றி நீங்கள் அறிந்திருக்க நியாய மில்லை. ஆனால் அண்மைக்காலமாக கசிப்பு மற்றும் கலாச்சார சீரழிவு போன்ற பல பிரச்சினைகளால் இப்பிரதேச மக்கள் சீரழிந்து வருவதாக கிடைத்த தகவல்களையடுத்து அப்பிரதேசத்தை நோக்கி விரைந் தோம். அங்குள்ள மக்களுடன் உரையாடி பல தகவல் களைத் திரட்டினோம்.

அட்டாம்பிட்டிய பிரதேசத்தை பிரதிபலிக்கும் பல்வேறு அரசியல் பிரதிநிதிகள் ஆளும் கட்சியில் இருந்தாலும் இப்பிரதேசமோ கவனிப்பாரற்ற நிலையில்தான் இன்றும் இருக்கின்றது. இங்குள்ள மக்கள் குடிப்பதற்கு நீரின்றி, வைத்தியசாலை வசதி யின்றி வாழ்ந்து வருகின்றனர். இவையெல்லா வற்றையும்விட வருந்தத்தக்க ஒரு விடயம்தான் கசிப்பு உற்பத்தி. மலையகத்தில் இடம்பெற்றுவரும் பல் வேறு கலாச்சார சீரழிவுகளுக்கும், கொலை, கொள் ளைச் சம்பவங்களுக்கும் இக்கசிப்பு உற்பத்தியே காரணமாக அமைந்து வருவதாக அப்பிரதேச மக்கள் பலரும் தெரிவித்தனர்.

இப்பிரதேசத்தைச் சேர்ந்த சக்திவேலைச் சந்தித் தோம். மரம் வெட்டி, விறகு உடைத்து ஒரு நாளைக்கு 500 ரூபா உழைப்பவர். கிடைக்கும் காசை மது அருந்தி விட்டு சிறு தொகை பணத்தை வீட்டுக்கு கொடுத்து வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரு மலையகப் பிரஜை இவர். மனைவி தோட்டத் தொழிலாளி. படிப்பு என் பதை கண்ணுக்கும் காட்டாமல் கொழும்பில் செல்வந் தர் வீடுகளில் தன் பிள்ளையை வேலைக்கு அமர்த்தி விட்டு தன் இஷ்டப்படி வாழும் சக்திவேல் மட்டு மல்ல இப்பிரதேசத்தில் வாழும் 95 வீதமானோர் இப்படித்தான் வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்களு டைய வீட்டுக்கு அருகிலேயே கசிப்பு தயாரிக்கப்பட்டு மலிவு விலையில் விற்கப்படுகின்றது. அதை அருந்தி விட்டு தங்கள் வாழ்க்கையையும் தன் பிள்ளையின் வாழ்க்கையையும் கேள்விக்குறியாக்கி வருகின்றனர். கைகள் எல்லாம் மரத்துப்போய் கஷ்டப்பட்டு வாழும் இவர், தான் கஷ்டம் காரணமாகத்தான் குடிப்பதாக கூறுகின்றார். அத்துடன் தன்னுடைய பிள்ளை

கொழும்பில் எங்கு எப்படி இருக்கின்றார் என்றே தெரியாது என்று வெகு சாதாரணமாகக் கூறுகிறார்.

'தோட்ட வைத்தியசாலையில டொக்டர் இருந்து எந்த பயனும் இல்ல. யாராவது சாகுற நிலையில இருந்தால் வந்து பார்த்து ரிப்போர்ட் தாறது மட்டும்தான் இவரது வேலை. தோட்டத்துல வேல செய்றவங்கட சம்பளத்த வெட்டித்தான் அவருக்கு சம்பளம் கொடுக்கிறாங்க. தோட்ட மேலதிகாரிகள், அரசியல்வாதிகள் எல்லோரிடமும் சொன்னம். டவுன்ல ஒரு ஹொஸ்பிட்டல் இருக்கு. அதுக்கு போங்கன்னு சொல்றாங்க. அப்ப எதுக்கு இங்க ஒரு டொக்டரும் நர்சும்? அநியாய சம்பளம்தானே?' என்று கேட்டார் மோகன்ராஜ். வைத்தியசாலை இப்படி கவனிப்பாரற்று கிடப்பதால் சுற்றியுள்ள காணிகளைக் கைப்பற்றிய சிங்களவர்கள் அப்பகுதிகளில் குடியேற்றங்களை அமைத்து வருகின்றனர். இப்பிரதேச மக்களுடைய கவனக் குறைவால் இவர்களுடைய பிரதேசமும் இன்று

# மூழ்கும்


மெல்ல மெல்ல பறிபோய்க்கொண்டிருக்கின்றது. கணவனை இழந்து 7 பிள்ளைகளுடன் கஷ்டப் படும் 42 வயதான வீரத்தாயைச் சந்தித்தோம். மனிதர்கள் வாழத் தகுதியே இல்லாத ஒரு குடிசையில் எவ்வித வசதிகளும் இன்றி மிகவும் கஷ்டப்பட்டு வாழும் அவரும் கிராமப்புறங்களில் வேலை செய்தே வாழ்க்கை நடத்துகின்றார். தனது 10 வயதுகூட நிரம்பாத பிள்ளைகளை வீடுகளில் வேலைக்கு அனுப்பிவிட்டு 'எனது பிள்ளைகள் கொழும்பில வேலை செய்றாங்க' என்று வெகு சாதாரணமாகக் கூறினார். பிள்ளைகளை பிறப்பு அத்தாட்சி பத்திரம் இல்லாத காரணத்தாலேயே படிக்க வைக்க முடியவில்லையாம். கச்சேரிகளில் போய் கேட்டால் 'இன்று தருகின்றேன் நாளை தருகின்றேன்' என்ற அதிகாரிகளின் அசமந்த போக்கு காரணமாக இழுத்தடிக்கப்படுவதாக கூறினார். 'அந்த காலத்துல யோசிக்காம இத்தன குழந்தைகள பெத்துக்கிட்டு இப்ப கஷ்டப்படுறன்' என்றார் வேதனையுடன்.

ஒரு கிலோ தேயிலை கொழுந்து 5 ரூபாவுக்கு விற்பனை ஆகுமாம். அதைத்தான் விற்று சீவியம் நடத்துவதாக கூறினார். 'தண்ணிக்கெல்லாம் சரியான கஷ்டம். மின்சார வசதியும் இல்ல. ஒரு வசதியும் இல்லைங்க. இரவுல திடீரென நோய் எண்டா பக்கத்துல உள்ளவங்கதான் உதவி செய்வாங்க. மந்திரிமாருக்கு சொல்லி ஒரு பிரயோசனமும் இல்ல. அவங்கவங்க வசதியத்தான் பார்க்குறாங்க. நாங்க எப்படி போனாலும் சரின்னுதான் இங்குட்டு உள்ளவங்க இருக்காங்க' என்று தனது கஷ்டத்தைக் கூறினார்.

பல இன்னல்களை சந்தித்து கஷ்டப்பட்டு வாழும் பலர் வசதி என்பது என்ன என்றே தெரியாமல் தங்களுக்கு கஷ்டமே இல்லை என்று கூறினர். ஆண்களை பொறுத்தவரையில் அனைவருமே போதைக்கு அடிமையானவர்களாகத்தான் இருந்தனர். வெளியுலக தொடர்புகளற்று நடைமுறை வாழ்க்கை பற்றிய எந்த விளக்கமும் இல்லாத அறியாமை வாழ்க்கையையே இவர்கள் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். அந்தப் பிரதேசத்தில் வாழும் சில படித்த இளைஞர்களை சந்தித்து உரையாடினோம்.

'இங்க கூடுதலா கசிப்பு குடிக்கிறவங்க இருக்குறாங்க. வீட்டுல மனைவி மட்டும்தான் தோட்டத்துல வேலை செய்வாங்க. மற்றவங்க நாட்டுலதான் வேலை செய்வாங்க. நாட்டுல 300 ரூபா சம்பளம் கொடுப்பாங்க. அத கொண்டுவந்து இங்க 100, 150 ரூபாக்கு கசிப்பு குடிச்சிட்டு மிச்சத்த வீட்டுக்கு கொண்டு போவாங்க. இப்படியான நிலவரம்தான் இருக்கு. வீட்டுலயும் நிறைய பிரச்சின இருக்கு. பக்கத்து வீட்டுல படிக்கிற பிள்ளைகளுக்கு இதனால இடைஞ்சலா இருக்கு. குடித்துவிட்டு வந்து வீட்டுல சத்தம் போடுவாங்க. தேவையில்லாத வார்த்தைகள் பயன்படுத்துவாங்க' என்ற சசிகுமாரின் வார்த்தைகளில் வேதனை கலந்த துயரம் தெரிந்தது.


மோகன்ராஜ்


பார்த்தீபன்


பிரகாஷ்


சக்திவேல்


வீரத்தாய்


சசிகுமார்

'இங்க உள்ள பிரச்சின எல்லாருக்கும் தெரியும். பக்கத்துல உள்ள பொலிஸுக்கு தெரியும். அரசியல் வாதிகளுக்கும் தெரியும். வடிவேல் சுரேஷ் வந்திருக் காரு. செந்தில் தொண்டமான், அரவிந்த குமார், ஆறு முகம் தொண்டமான் இப்படி எல்லா கட்சிக்காரர்க ளும் வந்திருக்காங்க. அவங்க வரும்போதே இந்த இடம் நல்லா தெரியும். பிரதான இடத்துலதான் இருக்கு. இந்த கசிப்பு தொழிலயும் பிரதான இடத்துல தான் செய்றாங்க. இது அவங்களுக்கும் தெரியும். தெரிஞ்சிக்கிட்டே கண்டுக்காம போறாங்க. இவங்க ளுக்கு கடிதம் அனுப்பி இருக்கம் இதெல்லாம் நிற் பாட்ட சொல்லி. சொல்லியும் இதுவரைக்கும் எந்த வொரு நடவடிக்கையும் எடுக்கல. ஒரு இரண்டு பேரால தோட்டத்துல உள்ள இளைஞர்களும் சரி, தோட்ட தொழிலாளிகளும் சரி, பாடசாலை மாணவர் களும் சரி எல்லாருமே பாதிக்கப்படுறாங்க. பக்கத்துல பொலிஸ வச்சிக்கிட்டு இத நிற்பாட்ட முடியாட்டி பொலிஸ் இருக்குறதுல அர்த்தமே இல்ல. ரோட்டுல குடிச்சிட்டு போற வாறவங்கள பிடிச்சி தண்டனை கொடுக்குறாங்க. ஆனால் இத பிரதானமா செய்றவங் களுக்கு தண்டனை கொடுக்குறாங்க இல்ல. இப்ப நாங்க பொலிஸுக்கு பிடிச்சி கொடுத்தாலும் அரசி யல்வாதிகளே கோல் பண்ணி அவங்கள வெளில விட சொல்றாங்க' என்றார் பார்த்தீபன். இப்பிரதேசத்திலி ருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவில்தான் பொலிஸ் நிலையம் இருக்கின்றதாம். ஆனால் அதிகாரிகள் தங்கள் சுயலாபத்துக்காக குறிப்பிட்ட தொகையை வாங்கிக்கொண்டு கண்டும் காணாமல் இருக்கின்றனர் களாம்.

'நாங்க ஏதும் நடவடிக்கை எடுத்தா நாங்கதான் பிரச்சின பண்றம் எண்டு எங்கள பிடிச்சி உள்ள போடுறாங்க. பொலிஸ் இருக்கும்போது நீங்க சட்டத்தை கையில எடுக்கேலாதுனு சொல் றாங்க. ஆனால் செய்றாங்களும் இல்ல. அது மட்டுமல்ல. தண்ணீர் வசதி, மலசலகூட வசதி ஒன்றுமே இல்லாமல் இருக்கம். இந்த வடிவேல் சுரேஷ் எல்லாம் பெயருக்கு மட்டும்தான். ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில எல்லாம் செய்துதாரன் எண்டு சொல்லிட்டு செய்து தரல்ல. தண்ணீர் லைன்ல கசிவு இருக்கு. ஒரு நீர்தாங்கி கட்டித்தாரதா சொல்லி அடிக்கல் நாட்டிட்டு இந்த பக்கம் வரவே இல்ல. மலசலகூடம் கட்டித்தாரதா சொல்லி குழிகள் வெட்டச் சொன்னாங்க. வெட்டி வச்சிக்கிட்டு பார்த்துக்கிட்டு இருந்தம். செய்து தரல்ல' என்றார் பிரகாஷ்.

பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்ற அரசாங்கம், இப் பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்து மக்களுடைய குறை நிறைகளைத் தீர்க்க முயற்சிக்க வேண்டும். மலையக அரசியல் வாதிகள்தான் இவ்வாறான பிரச்சினையுள்ள கிராமங்களை இனங்கண்டு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். வெறுமனே அரசாங்கத்துடன் கைகோர்த் துக்கொண்டு அவர்களைப் பலப்படுத்துவதால் என்ன பிரயோசனம்? இன்று தமிழர் பிரதேசங்கள் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களால் கொஞ்சம் கொஞ்சமாக காவு கொள்ளப்பட்டு வருகின்றன. நாம் விழிப் பாயிருந்தால்தான் எமது பிரதேசங்களைப் பாதுகாக்க முடியும். மக்களுக்கு பாதுகாப்பாக இருக்கவேண்டிய வர்கள்கூட சட்டவிரோதமான கசிப்பு உற்பத்திக்கு துணைபோவதுதான் மிகவும் வேதனையாக இருக்கின் றது. கசிப்பு உற்பத்தியை அதிகரித்து, இப்பிரதேச மக்க ளுடைய வாழ்வாதாரத்தைச் சீர்குலைத்து, கடைசியில் அத்துமீறிய குடியேற்றங்கள் மூலம் இம்மக்களுடைய காணிகளை பிடுங்கி, இவர்களை நடுத்தெருவில் அலையவிடுவதுகூட ஒரு திட்டமாக இருக்கலாமோ என்று அஞ்சத் தோன்றுகின்றது. நல்ல தொழில் வாய்ப் புக்களையும் அடிப்படைத் தேவைகளையுமே இப் பிரதேச மக்கள் வேண்டி நிற்கின்றார்கள். எல்லா வற்றுக்கும் முதல் இந்தக் கசிப்பு உற்பத்தியை ஒழித்துக்கட்ட துணிந்தவர்கள் யாரா வது முன்வரவேண்டும். வருவார்களா?





Photo & Video
Sri Sugandan's
STUDIO
289-1/1, GALLE ROAD,
COLOMBO-6
SRI LANKA.
Tel- 077 7309638, 011 2507265
Email- srisuganthans@yahoo.com
For Video Filming & Photography
Digital Video Filming & Editing
Album Makers (Karizma)
VHS to DVD

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

# விநியோகஸ்தர்கள் தேவை

இலங்கையிலிருந்து மாதமிருமுறை வெளிவந்து கொண்டிருக்கும் ஜனரஞ்சக பொழுதுபோக்கு சஞ்சிகையான 'இருக்கிறம்' தற்பொழுது நாடுமுழுதும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கென வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளை உள்ளிட்ட பிரதேசங்களிலிருந்து 'இருக்கிறம்' சஞ்சிகைக்கான விநியோகஸ்தர்கள் தேவைப்படுகின்றனர். இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நாடு முழுவதும் சஞ்சிகையை மொத்தமாகவோ சில்லறையாகவோ விற்பனை செய்யமுடியும். விநியோகஸ்தர்கள் தங்களது சுயவிபரங்களை கீழுள்ள எமது முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். மின்னஞ்சல் மூலமாகவும் உங்களது சுயவிபரங்களை அனுப்பி வைக்கலாம்.

**முகாமையாளர்,**
**விளம்பர சந்தைப்படுத்தல் பிரிவு,**
**இருக்கிறம்,**
**03, டொரிங்டன் அவனியூ,**
**கொழும்பு 7**

தொலைபேசி - 011 - 3150836, 011 - 2555529
மின்னஞ்சல் - irukiram@gmail.com

Jeya Offset Printers, No. 29 St`Sebastian Street, Colombo 12. Tel: 0112 478444